# பூஞ்சோலை

★

பேராசிரியர்

க. கணபதிப் பிள்ளை.

# பூஞ்சோலை

இலங்கைப் பல்கலைக் கழகத்துத் தமிழ்ப் பேராசிரியர்
க. கணபதிப் பிள்ளை
எழுதியது.

RATNA STORES
BOOK-SELLERS
13, MALAY ST.
SLAVE ISLAND

கொழும்பு
சாலிவாகன சகம் ௲அ௱எ௰௫
நந்தன தை.

1953

எல்லா உரிமையும் ஆக்கியோனுக்கே.

விலை ரூ. 1—50.

# முகவுரை.

இந் நூற்றாண்டிலே தமிழ் மொழியில் பலப் பல துறைகளிலும் புத்தம் புதிய நூல்கள் எழுந்து உலவுகின்றன. அவற்றுட் பெரும்பாலன உரைநடை இலக்கியங்கள். இன்று எழுதப்படும் உரை நூல்களுட் பல, பிற நாட்டு நல்லறறிஞர் நூல்களைத் தழுவி எழுந்தவை. அத்தகைய தழுவல் நூல்களைப் போன்றதே இந்நூலும், இது பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் செருமானிய நாட்டில் வாழ்ந்த தியோடோர் சுதோம் ( Theoder Storm ) என்னும் பெரியார் எழுதிய இம்மென்சே ( Immensee ) என்னும் கதை நூலைத் தழுவியது. தமிழ் நாட்டிற்கு ஏற்ற முறையில் கதைப் போக்கு முதலியவற்றைக் கூட்டியும் குறைத்தும் மாற்றியும் இந்நூலை வரைந்துள்ளோம். இயன்ற அளவு பிறமொழிச் சொற்களைக் குறைத்துள்ளோம். இந்நூலிற் குறைகள் உளவேல் அவற்றை நீக்கிக் குணத்தையே கொள்ளுமாறு தமிழுலகத்தை வேண்டுகிறோம்.

இந்நூல் உருப்பெறுங்கால் எம்மைப் பல்வகையாலும் ஊக்குவித்து எம்மோடு உடனிருந்துதவிய பண்டிதர் அ. சிற்றம்பலம் அவர்கள் இது வெளிவருங்கால் எம்மோடு இல்லாததைக்குறித்துப் பெரிதும் கவலுகின்றோம்.

இதனை யாக்குந்தோறும் பிழைகளைத் திருத்தியும் படி எழுதித் தந்தும் உதவிய நண்பர்களுக்கு எம் நன்றி.

இதனை அச்சிடுமாறு ஊக்கியும், அச்சிடுங்காலத்து ஆயோலை தூக்கியும் உதவிபுரிந்த எம் நண்பர் இராமநாதன் கல்லூரி ஆசிரியர் அ. சே. சுந்தரராஜன் அவர்களுக்கும் பெரிதும் கடப்பாடுடையோம். இதனை அழகுற அச்சிட்டுதவிய கும்பகோணம் ஹோமியோபதி அச்சகத்தாருக்கும் எமது நன்றி உரித்தாகுக.

கொழும்பு
நந்தன ௵
தை ௴ ௧௨

க. க.

என் நண்பர்

சைவ சித்தாந்தப் பெருந்தகை

**பண்டிதர். அ. சிற்றம்பலம் அவர்கள்**

*நினைவுக்கு.*

———

## உள்ளுறை.


| | | |
|---|---|---|
| முதுமைப் பருவம் | .... | 1 |
| இளமைப் பருவம் | .... | 4 |
| புதர்களுக்கு நடுவில் | .... | 9 |
| தெருவோரத்தில் குழந்தை நின்றது | .... | 23 |
| வீடு | .... | 36 |
| கடிதம் | .... | 45 |
| பூஞ்சோலை | .... | 46 |
| அன்னை எனக்கிட்ட. ஆணையதால் | .... | 60 |
| கமலநாயகி | .... | 70 |
| முதுமைப் பருவம் | ... | 80 |

# பூஞ்சோலை

## முதுமைப் பருவம்

இளவேனிற்காலத்து ஒருநாட் பின்னேரம் அழகிய உடையணிந்த முதியோன் ஒருவன் தெருவோரமாய் மெல்ல மெல்ல நடந்துசென்ருன். அவன் உலாவுக்காக வெளியே சென்று வீடு திரும்பிவரும் ஒருவன்போலக் காணப்பட்டான். காலிலே பழங்காலத்து மாதிரியான செருப்பு அணிந்திருந்தான். அது வழிநடையாலே தூசு படிந்திருந்தது.

அவன் கமுக்கட்டில் பொற்பூண் கட்டிய பிரம் பொன்று இருந்தது. தலை மயிர் நரைத்து வெண்மை யெய்தி அவன் முதுமையைக் காட்டியது. கண்களோ இளமைப் பருவத்தில் அவனுக்கிருந்த ஆண்மையையும் அழகினையும் இன்னுங் காட்டிக்கொண்டிருந்தன. அவை சுற்றிலும் இருப்பவை இயங்குபவை ஆகிய யாவற்றை யும் அமைதியாய் நோக்கிவிட்டுத் தமக்கு முன்னே அந்திக்காலத்துச் செங்கதிர்க் கற்றையில் குளித்துக் கொண்டிருக்கும் பட்டணத்தின் மாடிகளையும் நோக்கின,

அம்முதியோன் அப்பட்டணத்திற்குப் புதியவன் போலத் தோற்றினன், ஏனெனில் தெருவில் போவோர் வருவோரில் ஒரு சிலரே அவனைக் கண்டு அறிமுகங்

காட்டினர். இவ்வாறுயினும் அறியாதவருட் பலர் கவனத்தை ஆழ்ந்த கருத்தை உணர்த்தும் அவன் கண்கள் இழுத்தன.

இறுதியில் தெருவோரத்திலிருந்து பெயர்ந்து தனது வீட்டு வாசற்படியில் ஏறிநின்று பட்டணத்தை மீண்டுமொருமுறை பார்த்தான். பார்த்துவிட்டு வீட்டுக்குட் போகும்போது தனது வரவைக் குறிப்பதற்காகக் கதவில் தொங்கவிட்டிருந்த சிறு மணியை அடித்துவிட்டுச்சென்றனன். நடைசாலைக்கருகில் ஒரு சிறிய அறை இருந்தது. அவ்வறைக்குள் நின்று முதியவளொருத்தி சாளரத்தின் எழினியை நீக்கிப் பார்த்தனள். அப்பொழுது அவன் தனது கையிலிருந்த பிரம்பை அசைத்து, "அன்னம்மா, ஏன் இன்னும் விளக்கேற்றவில்லை?" என்று கேட்டான்; அவன் பேச்சின் இசை தெற்குநாட்டவர் பேசும் இசையைப் போலிருந்தது. இச்சொற்களை அவன் கூறியதும் அம்முதுமகள் சாளர எழினியை விட்டனள். இவளே அவன் வீட்டையும் அவ்வீட்டுக்கு ஆகவேண்டியவற்றையும் பார்த்துக்கொண்டுவருபவள்.

அம்முதியோன் வீட்டு நடைசாலையினூடாகப் போய், கோப்பை, பீங்கான் முதலிய பொருட்கள் அடுக்கிய அலுமாரி வைத்திருக்கும் ஓர் அறைக்குள் நுழைந்தனன், பின் அதற்கூடாகச் சென்று ஒரு சிற்றறைக்குட்போய் ஆங்கு மாடிக்கு ஏறுவதற்காகக் கட்டியிருக்கும் ஒரு படிக்கட்டின் வழியாக மேலேறி மாடியறையொன்றனை அடைந்தனன். அவ்வறை பெரிதுமன்று; சிறிதுமன்று; நடுத்தரமானது.

அங்கே ஒருவகைத் தனிமையும் அமைதியும் குடி கொண்டிருந்தன. அதன் ஒரு பக்கத்துச் சுவரருகில் பொத்தகமடுக்கிய அலுமாரி இருந்தது. வேறொரு பக்கத்துச் சுவரில் படங்கள் பல தொங்கின. அவற்றுட் சில மாந்தருருவப்படங்கள், ஏனைய ஊர்ப்படங்கள். அவ்வறையின் நடுவில் பச்சைத்துணி விரித்த ஒரு மேசை இருந்தது. அதன்மீது சில புத்தகங்கள் விரித்தபடி கிடந்தன. அம்மேசையருகில் பட்டாலாய அணையிட்ட ஒரு நாற்காலி வைக்கப்பட்டிருந்தது.

தனது கையிலிருந்த பிரம்பை ஒரு மூலையிற் சார்த்திவிட்டு அம்முதியவன் நாற்காலியில் போய் அமர்ந்தான். கைமீது கை வைத்துக்கொண்டு அவன் ஆங்குச் சாய்ந்திருந்த நிலையைப் பார்த்தோர் உலாவின் களைப்பை ஆற்றுதற்கே அவன் அங்ஙனம் அமர்ந்திருக் கின்றானென நினைப்பர், அவ்வாறு அவன் இருக்கும் பொழுது, வரவர இருட்டத் தொடங்கியது. சிறிது நேரத்தில் சாளரத்தின் வழியாய் வந்த நிலாவொளி ஆங்குச் சுவர்மேல் தொங்கிய படங்களில் வீழ்ந்தது. அவ்வொளி பலவிடமும் மெல்ல மெல்லப் பரவிக் கொண்டு போகப்போக, அம்முதுமகன் கண்களும் அவனை அறியாது அவ்வொளி போகுமிடமெல்லாந் தொடர்ந்து சென்றன.

இவ்வண்ணம் பரந்து சென்ற அவ்வொளி இறுதி யிற் கருஞ்சட்டம் போட்டுத் தூக்கிய படமொன்றின் மேல் விழுந்தது. உடனே அம்முதியவன் 'கமலநாயகி' என்று மெல்லெனத் தனக்குட் சொன்னான். இந்தப் பெயரைச் சொன்னதும் காலம் மாறியது; அவன் திரும்பவும் இளமைப் பருவத்தனாய்விட்டான்.

# இளமைப் பருவம்

அழகிய உருவாய்ந்த சிறுமியொருத்தி அவனருகு ஓடிவந்தாள். அவள் பெயர் கமலநாயகி. அவளுக்கு ஐந்து வயதிருக்கும். அவன் வயது அவள் வயதிலும் இரு மடங்கு. கழுத்திலே ஒரு பொற்சங்கிலி அணிந்திருந் தாள். அது அவளுக்கு ஒரு தனியழகைக் கொடுத்தது.

ஓடிவரும்போது அவள், "சுந்தரம்! இன்றைச்குப் பள்ளியில்லை; பள்ளியில்லை! இன்று முழுக்கப் பள்ளி யில்லை! நாளைக்குமில்லை!" என்று கூவிக்கொண்டு வந்தாள்.

அழகசுந்தரன் தனது கமுக்கட்டில் வைத்துக் கொண்டுவந்த புத்தகக்கட்டைக் கதவுக்குப் பின்னால் சுழற்றி எறிந்தான். அதன்பின் இரு குழந்தைகளும் வீட்டுக்கூடாக ஓடித் தோட்டத்தினுட் புகுந்தனர். அங் கிருந்து அதன் வாயில் வழியாக ஓடிப் புற்றரை ஒன்றை அடைந்தனர். எதிர்பாராது வந்த விடுமுறை அவர்க்கு மிகுந்த பயனை அளித்தது.

அப்புற்றரையில் அழகசுந்தரன் கமலநாயகியின் உதவியுடன் ஒரு சிறு மண் வீடு கட்டி முடித்திருந் தனன். வேனிற்காலத்துப் பின்னேர வேளைகளில் அவரிருவரும் அங்கேயே தங்கித் தமது பொழுதைக் கழிக்க எண்ணினர். ஆனால் அங்கு வாங்கு இல்லாதது தான் ஒரு குறை. அதனைச் செய்துமுடிக்க இவ்விடு முறையை அவன் பயன்படுத்தினான். அதற்கு வேண்டிய ஆணி, சுத்தியல், பலகை ஆகியவை நெடு நாளாகவே அடுக்காய் இருந்தன.

இங்ஙனம் அவன் வாங்கு செய்துகொண்டிருக்கையில் கமலநாயகி வாய்க்காற் கட்டோரஞ் சென்று காட்டுமல்லிகைப் பூக்களைப் பறித்துத் தனது முன் தானையை நிரப்பினுள். தான் சூடிக்கொள்வதற்கு அவற்ருல் மாலை தொடுக்க விரும்பினுள். இதற்கிடையில் அழகசுந்தரன் ஆணிகளைச் சொத்தியாக அறைந்த போதிலும் வாங்கை ஒருவாறு செய்துமுடித்தான். அதன்பின் சற்று வெளியே போய்க் களைப்பாற எண்ணினுன். வெளியே சென்றபோது தூரத்திலே புற்றரையின் மறுபுறத்தே கமலநாயகி நிற்பதைக் கண்டான்.

உடனே "கமலா, கமலா" என்று கூப்பிட்டான். அதைக் கேட்டதும் அவள் ஓடி வந்தாள். ஓடிவரும் போது அவள் கூந்தல் காற்றிலே பறந்து அசைந்து கொண்டிருந்தது.

"இங்கே வா; எங்கள் வீட்டுக்கு வேண்டிய வேலை எல்லாம் செய்து முடிந்துவிட்டன. என்ன, உன்னை வெய்யில் நன்ருகச் சுட்டுவிட்டது; வியர்வை ஒழுகுகின்றது, பார்த்தாயோ? உள்ளே வா. இந்தப் புது வாங்கிலே ஏறி இருப்போம். நான் உனக்கு ஒரு கதை சொல்லுகிறேன்," என்று சொன்னுன்.

அப்போது இருவரும் வீட்டினுட்சென்று புதிதாகச் செய்துமுடித்த வாங்கிலே ஏறியிருந்தனர். கமலநாயகி தனது முன் தானையினின்றும் பூக்களையெடுத்து மாலை கோத்துக் கொண்டிருந்தாள். அழகசுந்தரன் தனது கதையைத் தொடங்கினுன், "முன்னொரு காலத்தில் மூன்று நெசவுக்காரப்பெண்கள் இருந்தனர்............"

அப்போது கமலநாயகி "உந்தக் கதை எனக்குத் தலைகீழாய்த் தெரியும். திருப்பித் திருப்பி ஒரே கதையை எனக்கு இனி ஒரு நாளும் சொல்லக்கூடாது." என்று சொன்னாள்.

அதனால் அழகசுந்தரன் நெசவுக்காரப் பெண்களின் கதையை நிறுத்திவிட்டுச் சிங்கக்கூட்டிலே எறியப் பட்ட ஏழைமனிதன் கதையைச் சொல்லத் தொடங்கினான்.

"அதன்பின் இரவு வந்தது. விளங்குகிறதா? பெரிய இருட்டு. ஆகையால் சிங்கங்கள் நித்திரை கொள்ளத் தொடங்கின. இடையிடையே நித்திரையில் கொட்டாவி விட்டுத் தமது செந்நாக்கை வெளியே நீட்டின. அவற்றைப் பார்த்ததும் அம்மனிதன் அஞ்சி நடுங்கி, விடிந்து விட்டதென்று நினைத்தான். சடுதியில் ஒரு வெளிச்சம் அடித்தது; கண்ணைத் திறந்து பார்த்தான்; தனக்குமுன் ஒரு தேவதூதன் நிற்பதைக் கண்டான். அத்தேவதூதன் அவனைத் தன்பின்னே வருமாறு கையினாற் காட்டிவிட்டு நேராக மலைகளுக்கிடையே சென்றான்."

கமலநாயகி இதைக் கேட்டுக்கொண்டிருந்தாள் அதன்பின் அவள் "ஒரு தேவதூதனோ? அவனுக்குச் சிறகு இருக்கின்றதோ?" என்று வினவினாள்.

அதற்கு அழகசுந்தரன், "அது ஒரு கதை; தேவ தூதன் என்பதெல்லாம் சும்மா; அப்படியொருவரு மில்லை;" என்று விடையளித்தான்.

"என்ன, சும்மாவா? அவ்வாருயின் இப்படியான பொய்க் கதைகளை ஏன் எனக்குச் சொல்லுகின்ருய்?" என்று வெகுண்டு அவன் முகத்தை நோக்கினுள்.

அப்பொழுது அழகசுந்தரன் முகத்தைச் சுளித்து அவளைப் பார்த்தான். கமலநாயகி தடுமாறிய உள்ளத்தோடு அவனைப் பின்வருமாறு கேட்டாள்: "அப்படியாயின் அவ்வாறு ஏன் சொல்லுகின்ருர்கள் அம்மா, மாமி, அவர் மட்டுமன்றிப் பள்ளிக்கூடத்திலுள்ளவரும்."

"எனக்குத் தெரியாது" என்று அவன் விடையிறுத்தான்.

"அப்படியாளுல் சிங்கமும் இல்லையோ?" என்று கேட்டாள் கமலநாயகி.

"சிங்கம்......என்ன சிங்கமோ? ஓ ஓ சிங்கப்பூரிலே இருக்கின்றன. அங்குள்ள கோயிற் பூசாரிமார் அவற்றை வண்டியிற்கட்டி வளுந்தரத்துக்கூடாகச் செல்வர். நான் பெரியவனுய் வளர்ந்தபின்பு அங்கேயே போக எண்ணியிருக்கிறேன். இந்த நாட்டிலும் பார்க்க அது ஆயிரம் மடங்கு நல்ல நாடு. அங்கே இங்குள்ளதுபோல வரட்சியில்லை. நீயும் என்னேடு வரவேண்டும். என்ன, வருவாயோ?"

"ஓம், அம்மா வந்தால்; அல்லாமலும் உன் அம்மாவும் வரவேண்டும்," என்று கமலநாயகி விடை பகர்ந்தாள்.

"இல்லை நீ சொல்வது சரிவராது; அவரிருவரும் மிக முதியவராய் விடுவர். அவர் எம்மோடு வரமுடியாது," என்ருன் அழகசுந்தரன்.

"நான் தனியே எப்படி வருவது?"

"இல்லை வரத்தான் வேண்டும். நான் போகும் நாளையில் நீ என் மனைவியாய் விடுவாய். அது திண்ணம். பின்னர் யார்தான் தடுக்கமுடியும்?"

"அப்படி நான் உன்னோடு வந்தால் என் அம்மா அழுவார்."

அப்பொழுது அழகசுந்தரன் பரபரப்போடு கூறுவன்: "நாங்கள் இங்கு இடையிடையே வந்து போகலாம். ஒரே சொல்லாய்ச் சொல்லிவிடு. என்னோடு அங்கு வருவாயோ? சொல்லு; இல்லாவிட்டால் இருந்து பார். நான் தனியே போவேன். அப்படிப் போனால் இங்கு ஒருக்காலும் திரும்பி வரமாட்டேன்."

சிறுமியின் கண்களில் நீர் ததும்பிற்று. என்னை அப்படி வெகுண்டு பார்க்காதே, சரி, நான் உன்னோடு சிங்கப்பூருக்கு வருவேன்," என்று கூறினள் அவள்.

அதைக் கேட்டு அழகசுந்தரன் அடக்கமுடியாத உவகையுற்றவனாய் இரு கைகளையும் பற்றி அவளை இழுத்துக்கொண்டு வெளியே புற்றரைக்கு ஓடினன்.

'சிங்கப்பூருக்கு, சிங்கப்பூருக்கு' என்று பாடிக் கொண்டு அவள் கைகளைப் பிடித்து வட்டமாய்த் தன்னைச் சுற்றிச் சுழற்றினன். அப்பொழுது அவள் தலைமயிரிற் கட்டியிருந்த பட்டுத்துண்டு அவிழ்ந்து கீழே விழுந்தது. சடுதியில் சுழற்றலை நிறுத்தி அமைதியாய்ப் பின்வருமாறு கூறினன். "அப்படி ஒருக்காலும் நடவாது. உனக்கு மனத்திடமில்லை."

"கமலம், சுந்தரம்" என்று தோட்டவாசலில் நின்று யாரோ கூப்பிட்டது கேட்டது. "ஏன், ஏன்" என்று இரு குழந்தைகளும் உரத்துக் கூறிவிட்டுக் கைகோத்த வண்ணம் வீட்டுக்குச் சென்றனர்.

---

## புதர்களுக்கு நடுவில்

இவ்வண்ணம் இரு குழந்தைகளும் ஒன்ருக வளர்ந்துவந்தனர். அவனது சுறுசுறுப்பான குணத்திற்கு எதிர்மாருக அவள் மிக அமைதியான குணமுடையவளாய் இருந்தாள். எனினும் ஒருவரையொருவர் விட்டுப் பிரியாதிருந்தனர். அவரிருவரும் ஒன்றுகூடி ஓய்வான நேரங்களை இன்பமாய்க் கழிப்பர். சில வேளைகளில் தமது நேரத்தை அவள் தாயோடு கூட இருந்து போக்குவர். மறு வேளைகளில் செடிகொடி நிறைந்த புதரிலும் வயலிலும் உலாவித் திரிவர்.

ஒரு நாள் பள்ளிக்கூடத்தில் கமலநாயகியைச் சட்டம்பியார் ஏசினுர். இது அங்கு கிட்டவிருந்த அழகசுந்தரன் செவியில் விழுந்தது. உடனே சட்டம்பியாரின் சீற்றத்தைத் தன்மேல் இழுத்துவிடலாமென்று நினைத்து, தன் கையிலிருந்த கற்பலகையை விறுக்கென மேசைமேல் அடித்தான். எனினும் அவன் நினைத்தவாறு காரியம் பலிக்கவில்லை.

சட்டம்பியார் வகுப்பிலே தமிழ்நூலைக் கற்பிக்கும் போது அவன் எண்ணமெல்லாம் வேறெங்கோ இருந்தது. அது அவன் புதிதாய் இயற்றிக்கொண்

டிருக்கும் ஒரு பெரிய பாட்டிலேதான்......... அதிலே தன்னை ஒரு கழுகுக் குஞ்சாகவும் சட்டம்பியாரை ஒரு கருங்காக்கையாகவும் கமலநாயகியை ஒரு வெண்புறுவாகவும் உருவகித்தனன். கழுகுக்குஞ்சு தனக்குப் பறக்கச் சிறகு முளைத்தவுடனே கருங்காக்கைமீது பழிக்குப்பழி வாங்க எண்ணியிருப்பதாக அமைத்துப் பாடினான்.

தானியற்றிய பாட்டின் சுவையிலே இளம்புலவன் மயங்கிவிட்டான். அதனால் அவன் கண்களில் நீர் ததும்பிற்று. தன்னைப்பற்றி மிகப் பெரிதாக எண்ணினன். வீடுபோய்ச் சேர்ந்தவுடன் எழுதாத ஒற்றைகளுள்ள பொத்தகமொன்றைத் தேடியெடுத்து, அதிலே தான் முதன் முதற்பாடிய இப்பாட்டைப் பெருமிதத்தோடு எழுதிவைத்தனன்.

சில காலத்தின்பின் அவன் வேறொரு பள்ளிக்கூடத்துக்குப் போக நேர்ந்தது. அங்கு தன்னோடொத்த அகவையுள்ள புது மாணவர் பலரோடு கூடிப் பழகினன். இப்படிப் பழகியபோதும் கமலநாயகியிடம் அடிக்கடி போய்வருவதை அவன் நிறுத்தவில்லை.

முன்னாட்களில் தான் சொன்ன கதைகளில் அவளுக்கு மிகப் பிடித்தவற்றை அவன் ஒரு பொத்தகத்தில் எழுதிவைத்தான். அங்ஙனம் எழுதும்போதெல்லாம் தன் மனதில் எழும் கற்பனைகளையும் அவற்றோடு சேர்த்துவிட முயலுவன். எனினும் அவன் முயற்சி கைகூடுவதில்லை. காரணம் அவனுக்கு விளங்கவில்லை.

அதனாலே தான் கேட்டவாறே அக்கதைகளை எழுதி அவன் கமலநாயகியின் கையிற் கொடுத்தான். அவள் அப்பொத்தகத்தைத் தனது எழுத்து மேசைக்குள்ளே கவனமாகப் பூட்டி வைத்திருந்தாள். பின்னேர வேளைகளில் அவன் கமலநாயகியின் வீட்டுக்கு வந்து அவளோடு இன்பமாகப் பேசிக்கொண்டிருப்பான். அந் நேரங்களில் கமலநாயகி அப்பொத்தகத்தை எடுத்து அதில் எழுதியுள்ள சிறு கதைகளைத் தன் அன்னைக்குப் படித்துக் காட்டுவள். அவற்றைக் கேட்கும்போதெல்லாம் அழகசுந்தரன் தனக்குள்ளே மிகுந்த களிப் பெய்துவன்.

இவ்வாறு ஏழாண்டு கழிந்தன. அழகசுந்தரன் மேற்படிப்புக்காக அவ்வூரை விட்டு வேறிடம் போக வேண்டியிருந்தது. 'அவ்வாறு அவன் சென்றுவிட்டால், தன் காலத்தைத் தனியே கழிக்கவேண்டி வருமே', என்ற எண்ணம் கமலநாயகியை வருத்தியது. இதை ஒருவாறு மட்டிட்டுணர்ந்த அழகசுந்தரன் ஒருநாள் அவளுக்குப் பின்வருமாறு கூறினன்: "கமலா, நான் உன்னைவிட்டுப் பிரியப்போகின்றேன் என்ற எண்ணம் உன் உள்ளத்தை உறுத்திக்கொண்டிருக்கிறது. அது எனக்குத்தெரியும். ஆனால் என்ன செய்வது! 'இளமையிற் கல்வி சிலையில் எழுத்து' என்றார் பெரியோரும். வேண்டிய காலத்திலே கல்வியைக் கற்றுக்கொள்ளாது விட்டால் அகவை முதிர்ந்தபின் அதனைப் பெறுதல் அரிதினும் அரிது. எமது பிரிவு கல்வியிற் பிரிவே, என் கல்வி உன் நலத்துக்காகவேயன்றிப் பிறிதொன்றிற்காகவும் அன்று. ஆகையால் உன் கவலையை ஒழி. அன்றியும், என் பிரிவினால் எழுந்துயரை ஆற்றிக்கொள்வதற்காக உனக்குத் தர என்னிடம் மருந்தொன்றுண்டு.

முன்போலவே யான் கதைகள் எழுதி உன் அன்னை யாருக்கு வரையும் கடிதத்துள் வைத்து உனக்கு அனுப்புவேன். ஆனால் ஒன்று; அவற்றை நீ படித்துப் பார்த்து அவை உனக்குப் பிடித்துக் கொண்டனவோ இல்லையோ என்று எனக்குக் கடிதமூலம் தெரிவிக்க வேண்டும்; ஆவலோடு எதிர்பார்த்திருப்பேன்.'' இவ் வாறு அவன் மொழிந்ததைக் கேட்டதும் அவள் மனம் ஒருவாறு ஆறியது.

அழகசுந்தரன் மேற்படிப்புக்காக வேறிடம் ஏகும் நாளும் கிட்டியது. அந்நாள் வருமுன் அவனது பாட்டுப் பொத்தகத்துள் பின்னும் பல பாட்டுக்கள் இடம் பெற்று விட்டன. அப்பொத்தகத்தில் அவன் வரைந்த கணக்கற்ற பாட்டுக்கள் யாவற்றுக்கும் கமலநாயகியே பாட்டுடைத் தலைவி. பாட்டெழுதும் பொத்தகமும் அரைப்பங்கு முடிந்துவிட்டது ஆனால், அவன் இதைக் கமலநாயகிக்குக் கூறவில்லை. இஃதொன்றே அவன் அவளுக்கு வெளியிடாது தனக்குள் ஒளித்து வைத்த மறைபொருள்.

ஆனிமாதத்து உத்தரநாளன்று அழகசுந்தரன் மேற் படிப்புக்காகத் தன் ஊர்விட்டுப் புறப்படப் போகின்றான். அதற்கு இன்னும் ஒருநாளே தானிருக்கிறது. கமல நாயகியின் தாயாகிய கண்ணகையார் அழகசுந்தரன் மேற்படிப்பில் தேர்ச்சி பெறுதற்காக இறைவனுக்கு வழிபாடாற்ற வேண்டுமென ஆவல் கொண்டார். அதன் பொருட்டு அவர் அவனையும் கமலநாயகியையும் கூட்டிக் கொண்டு தம் ஊருக்கு அயலிலுள்ள கோயிலொன்றிற் குப் போய்க் கடவுளை வணங்கி அந்நாளை நன்னாளாகக் கழிக்க எண்ணினார். அதற்காக அச்சிறுவரின் கூட்டாளி

மாரையும் ஒன்று சேர்த்துக்கொண்டு அக்கோயிலுக்குப் புறப்பட்டார். அக்கோயிலோ ஒரு காட்டின் நடுவில் அமைந்திருந்தது.

அவ்வூரிலிருந்து கோயிலை அடைய இரண்டு மணி நேரம்வரை செல்லும். அக்கூட்டத்தார் யாவரும் ஒரு வண்டியிலேறிச் சென்றனர். காட்டின் அருகே வந்ததும் தெருவோரத்தில் வண்டியை நிறுத்திவிட்டுத் தாம் கொண்டுவந்த பெட்டிகள் முதலியவற்றைக் கையிலெடுத்துக்கொண்டு காட்டுக்குள் நுழைந்தனர். அவ்விடத்திலிருந்து கோயிலை அடையக் கால்நடையாகச் செல்லுதல் வேண்டும். சிறிதுநேரம் நடந்து காட்டின் நடுப்பாகத்தை அடைந்தனர். அவர்போம் வழியருகே சவுக்கமரம் அடர்ந்தோங்கி வளர்ந்து நின்றன. அதனால் அவ்விடம் தண்மை பொருந்தி இருளடர்ந்திருந்தது. நிலமெல்லாஞ் சவுக்கஞ் சுள்ளிகளும் ஊசி போன்ற அதன் இலைத்துண்டுகளும் செறிந்திருந்தன. வீசுங்காற்றில் அச் சவுக்கமரங்கள் தம் கிளைகளை வீசி வீசி ஓவென்னும் ஓதையை ஊதி நின்றன.

அரை மணி நேரம் நடந்தபின் அவர் சவுக்கமரத்தின் இருள் மூடிய இடத்தைக் கடந்து, ஒளி மிளிர்ந்து அழகு செறிந்த பல் வேறு மரங்கள் உன்னதமாய் ஓங்கி நிற்கும் கவின்பெறு காட்சியுடைச் சிறு காட்டின் பகுதியொன்றை அடைந்தனர். எங்கு பார்த்தாலும் ஒண்மையும் பசுமையும். அங்குமிங்கும் கதிரவனின் ஒண்கதிர்கள் பச்சிலை அடர்ந்த கிளைகளுக்கூடாக நுழைந்து வீழ்ந்து திகழ்ந்தன. தலைக்கு மேலுள்ள மரக்கிளைகளில் அணிற்கூட்டம் அங்குமிங்கும் பாய்ந்து பாய்ந்து ஒலி எழுப்பித் திரிந்தன.

சற்றுத் தூரத்துக்கப்பால் வேறோரிடத்தில் உயர்ந்து செறிந்த மரங்களின் கிளைகள் தலைக்குமேலே பந்தரிட்டதுபோல் இலைகள் அடர்ந்திருந்தன. ஆதவன் கதிர் கூட அவ்விடத்து அணுகமுடியாது; அவ்வளவு நெருக்கம். இனிமையும் அழகும் பொலிந்து திகழும் அவ்விடத்தில் வானளாவிய கோபுரங்களோடு அக் கோயில் விளங்கியது. கோயிலை அடைந்ததும் இறைவனை எல்லோரும் அன்போடு வணங்கினர்.

கண்ணகையார் அக்கோயிலைப் பலமுறை வலம் வந்து வீழ்ந்து வணங்கி இறைவன்மீது தேவாரப்பாக்கள் பலவற்றைப் பாடி அவனை வழுத்தினர். பாடத்தொடங்கியதும் அவர், தம்மை மறந்தவராய் உள்ளம் அனலிடைப்பட்ட மெழுகென உருகிக் கண்ணீர் வார மெய்மயிர் சிலிர்ப்பப் பேரின்ப நிலையை எய்தித் தாம் நின்ற இடத்தில் அங்ஙனமே அசைவற்ற மரம்போல நின்றூர். தம்முடன் கூட வந்தவர்கள் அவ்விடத்தைவிட்டுச் சென்றதையும் உணர்ந்திலர். தம் ஆருயிர்த்தோழியின் அருமைப் புதல்வன் அழகசுந்தரன் கல்வியில் திறமையடைந்து பேரும் புகழும் பெறுதற்குக் கடைக்கணித்தருளுமாறு இறைவனைக் குறையிரந்து வேண்டினர். சிறிது நேரம் இங்ஙனம் இறைவழிபாட்டிலேயே ஈடுபட்டிருந்து பின்பு ஏனையோர் இருக்குமிடத்தை அடைந்தார்.

அதன்பின் காலைவேளை உண்டி அருந்துவதற்கென எல்லோரும் ஓரிடத்தில் வட்டமாக அமர்ந்தனர். கண்ணகையார் வீட்டிலிருந்து புறப்பட்டு வரும்போதே வேண்டிய உணவை ஆக்கி ஒரு பெட்டியிலிட்டுக்

கொண்டு வந்திருந்தார். எல்லோரும் அமர்ந்ததும் தாம் கொண்டுவந்திருந்த உணவுப் பெட்டியைத் திறந்தார். அவரோடு கூடிவந்த முதியாரொருவர் அவ்வுணவை அங்குள்ளார் யாவருக்கும் பகிர்ந்து வழங்கும் பொறுப்பை மேற்கொண்டார்.

அங்ஙனம் கொடுக்கும்பொழுது அப்பிள்ளைகளை நோக்கி அம்முதியார் கூறியதாவது: "பிள்ளைகளே! நீங்கள் எல்லோரும் வயிருர உண்ணுங்கள்; இன்று உங்களுக்கு உச்சிவேளை உணவு வழக்கமான நேரத்தில் அகப்படாது; உணவை அருந்தியபின் ஒரு சிறிது உலாவி இவ்விடத்திலுள்ள காட்சிகளைக் கண்டு களியுங்கள். இக்கோயிலோ சிற்ப வேலைப்பாட்டுக்கும் ஓவிய வேலைப்பாட்டுக்கும் மிகப் பேர்போனது; இதன் சுவர்தோறும் தீட்டப்பெற்ற அழகிய படங்களையும் கோபுரத்தில் வைத்துள்ள உருவச் சிலைகளையும் கண்டு இன்புறலாம்; அன்றியும் இக்கோயிலுக்கு அருகிலுள்ள பூங்காவோ மிக வனப்பு வாய்ந்தது; இதுவும் நீங்கள் பார்க்கவேண்டியதொன்று. இக்காட்சிகளைப் போய்ப் பார்த்துவிட்டு, நெடுநேரம் நிற்காது வந்திடுங்கள். ஆனால் இங்கிருந்து தூரத்தே செல்லலாகாது. அவ்வாறு சென்றால், சிறுவராகையின் வழிதப்பிவிடுவீர்கள். உங்களைத் தேடி வருவதற்கு இங்கு யாருமில்லை. ஆகையால் கருத்தாயிருந்து உச்சிவேளைக்குமுன் இங்கு வந்து சேருதல் வேண்டும். சரி, இப்போது நீங்கள் போய் உலாவலாம்."

அதைக் கேட்டதும் அச்சிறு பிள்ளைகள் கோயிலை நோக்கிப் புறப்பட்டனர். அங்கு சென்றதும் ஓவியங்

கள் பலவற்றையும் பார்த்துக் களிப்பெய்தினர். ஒரு சிலர் பூங்காவினுள் நுழைந்து அங்கு மலர்ந்திருக்கும் பல்வகை மலரையுங் கண்டு இன்புற்றனர். அந்நேரம் ஓர் இளந்தென்றல் பூக்களின் நறுமணத்தோடு கூடி உலாவியது. அதனால் கழிபேருவகை அடைந்த அச் சிறுவர் கூட்டம், அதன் நடுவிலுள்ள குளக்கட்டொன்றி லமர்ந்து அவ்விடத்திலுள்ள காட்சிகளை நோக்கியது. அக்கூட்டத்திலேயே அழகசுந்தரனும் கமலநாயகியும் இருந்தனர்.

சிறிது நேரம் கழிந்ததும் அக்கூட்டத்திலிருந்த சிறுவன் ஒருவன், "நண்பர்களே! இங்கு நெடுநேர மிருந்து பார்ப்பதற்கொன்றுமில்லை. வாருங்கள் இக்காட்டினுள் சிறிது தூரம் செல்வோம்", என்று கூறினன். புதியனவற்றைக் கண்டு களிப்பெய்தும் அகவையாயினமையின் அங்குள்ளோர் யாவரும் ஒன்று கூடி, "அதுவே சரி, வாருங்கள், அங்கு சென்று பார்ப் போம்" என்றனர். அதன்பின் அவர் அக்காட்டில் ஒரு பக்கத்தை நோக்கி நடந்தனர். அவர் போன பக்கத்தில் ஒரு நாவற்காடு இருந்தது. அங்கு சென்ற தும் சிறுவரெல்லோரும் ஒருங்கு சேர்ந்து நாவற்பழம் பறிக்கச் சென்றனர். அழகசுந்தரனோ கமலநாயகியை நோக்கி, "என்னோடு வா கமலா, நாவற்பழம் நிறைந் திருக்கும் பற்றைகளிருக்குமிடம் எனக்கு நன்கு தெரியும். உனக்கு வேண்டிய அளவு பறித்துத் தருவேன்", என்று மொழிந்து அவளைத் தன் கையிற் பிடித்துக்கொண்டு ஒரு பக்கஞ் சென்றான்.

காட்டுக்குள் இருவரும் நெடுந்தூரஞ் சென்றனர். எங்கணும் பெரிய மரங்கள் செறிந்திருந்தன. வானத்

திலே கண்ணுக்குத் தெரியாத தூரத்திலெழும் வல்லூறுகள் இடையிடை எழுப்பும் ஒலியைத் தவிர அக்காட்டில் அமைதியே குடி கொண்டிருந்தது. ஓரிடத்துப் பற்றைகளுக்கூடாக இருவரும் போக வேண்டியிருந்தது. அப்பற்றைகளோ மிக அடர்ந்திருந் தமையால் அழகசுந்தரன் கமலநாயகிக்கு முன் சென்று சில மரக்கிளைகளை முறித்தும் அங்கு படர்ந்திருக்கும் கொடிகளை அறுத்தும் சிறுவழியொன்றனை உண்டாக்கி ஞன். ஆனுல், அவள் வருவதற்கு இவ்வாறு வழி வெட்டி விடுவதன்முன் தன்னைக் கமலநாயகி கூப்பிடும் ஓசை அவன் காதில் விழுந்தது. உடனே திரும்பினுன். அப்பொழுது "அவ்வளவு விரைந்து செல்லாதே, நின்று கொள். இதோ யானும் வந்துவிட்டேன்," என அவள் இடும் ஓசை மட்டும் கேட்டது.

எனினும் அவன் கண்கள் அவளைக் கண்டில. சிறிது நேரத்தில் அவள் சிறு பற்றைகளுக்கூடாக நுழைந்து வெளியே வருவதற்கு முயன்று கொண்டிருப்பதைக் கண்டான். உடனே அவளிடத்தோடினன். அவள் கூந்தலும் உடையும் பற்றைக்குட் சிக்குண்டிருப்பதைக் கண்டு, அவற்றை மெல்ல மெல்ல எடுத்து, அவளை அதன் பிடியினின்றும் விடுவித்தான். அங்கிருந்து இருவரும் வெளியான ஒரு புற்றரையை அடைந்தனர். ஆங்கெனிலோ பல நிறமுள்ள வண்ணத்திப்பூச்சிகள் அவ்விடத்து மலரும் பூவின் தேனை உண்டு களிமயக் குற்றுத் திரள் திரளாக எங்கணும் பறந்து திரிந்தன.

கமலநாயகி பற்றைக் கூடாகப் புகுந்து வரும் பொழுது குலைந்து வீழ்ந்த தலைமயிர் அவள் முகத்திற் படிந்திருந்தது. அதை அழகசுந்தரன் தன் கையினுல்

நீக்கினான்; பின்பு அதைக் குடுமியாய் முடிக்க விரும்பினன். அவள் மறுத்தனள். எனினும், அவன் மேலும் மேலும் விரும்பிக் கேட்டதனால் ஒருவாறு இசைந்தனள்.

குடுமி முடிந்ததும் அவள் நெட்டுயிர்ப்புடன் "சரி, நீ ஆய்ந்த நாவற்பழங்கள் எங்கே?" என்று கேட்டாள்.

"இதோ இருக்கின்றன" என்று கூறிவிட்டு அருகிலிருந்த நாவற்பற்றையை நோக்கினன். ஆனால் அப்பற்றையோ பழமின்றி வெறுமையாயிருந்தது. அதைக் கண்டதும் அவன், "அடடா! மோசமாய் விட்டதே. தெய்வமகளிர் எமக்கு முன்வந்து அப்பழங்களைப் பறித்துச் சென்றனர்போலும். என்ன செய்யலாம்?" என்றனன்.

அப்பொழுது கமலநாயகி, "ஓகோ அப்படியோ! தெய்வமகளிர் வந்து பழத்தைப் பறித்த அடையாளமொன்றும் இங்கில்லையே. சரி போகட்டும், யான் இன்னும் களைக்கவில்லை. வேறிடஞ்சென்று பார்ப்போம்" என்றனள்.

சிறிது தூரஞ் சென்றதும் அங்கு ஒரு சிற்றருவி பாய்வதைக் கண்டனர். அதன் அக்கரையிலும் அடவி ஒன்றிருந்தது. அழகசுந்தரன் கமலநாயகியைத் தூக்கிக் கொண்டு அவ்வருவியைக் கடந்தனன். அதன்பின் அவ்வடவியில் அடர்ந்து வளர்ந்த மரங்களினூடாகச் சென்று சிறிது நேரத்துள் புல்வெளியொன்றினை அடைந்தனர்.

"கட்டாயம் இங்கே நாவற்பழமிருக்கும்; ஏனெனில் அதன் மணம் வீசுகின்றது." என்று அச்சிறுமி

கூறினள். அழகசுந்தரனும் "அப்படி இருக்கினும் இருக்கும்" எனப் பகரவே, இருவருமாக அவ்விட மெங்கணும் அலேந்து தேடினர். ஆனால் நாவற்பழமோ காணப்படவில்லே. சற்றில் அழகசுந்தரன் நாலாபக்கமும் திரும்பிப் பார்த்துவிட்டு, "இங்கு எழும் மணம் நாவற் பழத்தின் மணமன்று; இவ்விடத்து வளர்ந்திருக்கும் புற்களின் மணமே" என்றனன்.

எங்கு பார்த்தாலும் குத்துச்செடிகள் நிறைந் திருந்தன. அச்செடிகளின் நறுமணம் இளந் தென்றலோடு வந்து கமழ்ந்துகொண்டிருந்தது. தரை யெங்கணும் சிறுபுற்கள் பச்செனப் படர்ந்திருந்தன.

"இங்கு எவ்வளவு தனிமையாய் இருக்கிறது! எம்மோடு வந்தவரில் ஏனேயோர் எங்கு சென்றனரோ?" என்று மொழிந்தனள் கமலநாயகி. அவ்விடத்திலிருந்து திரும்பிப்போக அழகசுந்தரனுக்கு மனமெழவில்லே. அவன் தன் கைகளே உயர்த்தி, "கொஞ்சம் பொறு: காற்று எப்பக்கத்தினின்று வருகின்றது?" என்று வினவினன். ஆனால் பெருங்காற்ருே அங்கு வீசவில்லே; இளந்தென்றல் தான்.

"உற்றுக்கேள், அவர் பேசுவது போல் கேட் கின்றது எனக்கு. அப்பக்கமாய் ஒருமுறை கூப்பிடு," என்ருள் கமலநாயகி.

அழகசுந்தரன் தன் இருகைகளேயும் குவித்து வாயில் வைத்து, "இங்கே வாருங்கள்" என்று உரத்துக் கூவினன்.

அப்பொழுது, "இங்கே வாருங்கள்" என்று ஓர் ஒலி கேட்டது.

"கேட்டியோ? அவர்கள் மறுமொழி கூறினார்கள்." என்று சொல்லிக் கொண்டு கமலநாயகி உவகையால் தன் கைகளைக் கொட்டினள். அப்பொழுதும் அவ்வாறே கைகொட்டும் ஒலி கேட்டது.

"இல்லை, அப்படியொன்றுமில்லை; அது எதிரொலி" என்றான் அழகசுந்தரன்.

அதைக் கேட்டதும் கமலநாயகி அழகசுந்தரன் கையைப் பற்றி, "எனக்குப் பயமாயிருக்கிறது; வா போவோம்" என்று பதறினாள்.

அதற்கவன் "சீச்சீ! நீ ஒன்றுக்கும் அஞ்சாதே; இங்கே மிக இன்பமாயிருக்கிறது; அந்த மரநிழலின் கீழே இருக்கும் அப்பசிய புல்லின்மேல் இரு; சிறிது களைப்பாறுவோம்: மற்றையோர் விரைவில் வந்து விடுவர்" என்று கூறினான்.

அப்போது கமலநாயகி பதிவாயிருக்கும் ஒரு மரக் கொம்பரின் நிழலிலே அமர்ந்தவளாய், எங்கிருந்து தம் நண்பரின் ஓசை வரும் வருமென்று கூர்ந்து கேட்டுக் கொண்டிருந்தாள். சற்றுத் தூரத்தில் அழகசுந்தரன் தறித்த ஒரு மரத்தி னடிக்கட்டையி லேறியிருந்து அவளை உற்று நோக்கிக்கொண்டிருந்தனன்.

உச்சி வேளை ஆயது. வெயிலோனும் விசும்பினின்று விரிகதிர் பரப்பி விளங்கொளி வீசினன். சிறு வண்டுகள் தம் பொன்னிறச் சிறகரை விரித்து அங்குமிங்கும் பறந்து முரன்றுகொண்டு திரிந்தன. எங்கும் இன்ப மயமான இரைச்சலும் கிணுகிணுப்பும் அவர் காதில் ஒலித்த வண்ணமிருந்தன. அடவியினுள்ளே வெகு

தொலைவில் இடையிடை மரங்கொத்திக்குருவி, 'டொக் டொக்' என்று மரத்திற் கொத்தும் ஒலியும், வேறு பறவைகள் கீச்சுக் கீச்சென்று கத்தும் ஓசையும் கேட்டுக் கொண்டேயிருந்தன.

"உற்றுக்கேள்; ஒரு மணியோசை கேட்கின்றது" என்றாள் கமலநாயகி.

"எங்கே?" என்றான் அழகசுந்தரன்.

"எனக்குப் பிற்புறத்தில்; என்ன, உனக்குக் கேட்கின்றதோ இல்லையோ?"

"அப்படியானால் எமக்குப் பிற்புறத்தேதான்கோயில் இருக்கிறது; வா, அவ்விடத்திற்குச் செல்வோம்."

அதன்பின் அவரிவரும் கோயிலை நோக்கிப் புறப்பட்டனர். கமலநாயகி களைப்படைந்தமையால் நாவற் பழம் பறிக்கும் எண்ணத்தைக் கைவிட்டனர்.

சற்றுத்தூரம் நடந்ததும் கோயிலுக்கருகில் தம் நண்பர் தங்கியிருக்கும் இடத்திளின்று கெக்கட்டமிட்டுச் சிரிக்குமோசை மரங்களினூடாக வந்து அவர் காதிற் பட்டது. அப்பக்கத்தை நோக்கி அவர் மேலும் சென்றதும் அங்கு புற்றரையில் ஒரு வெள்ளைச்சீலை விரிக்கப்பட்டிருப்பதைக் கண்டனர். அதன்மீது உச்சி வேளை உணவுக்கு வேண்டிய தின்பண்டங்கள் வைக்கப் பட்டிருந்தன.

அவ்விடத்து அம்முதியவர் சிறுவருக்கெல்லாம் உணவு கொடுத்துக்கொண்டிருந்தனர்.

அப்பொழுது அழகசுந்தரனும் கமலநாயகியும் மரங்களினூடாக அங்கு வந்தடைந்தனர். அவரைக் கண்டதும் அங்கு உணவு அருந்திக்கொண்டிருந்த சிறுவரெல்லோரும் ஒரே முறையில் "வழி தப்பினோர் வந்துவிட்டனர்! வந்து விட்டனர்!!" என்று ஆரவாரித்தனர்.

அவரிருவரையுங் கண்டவுடனே அம்முதியவர் "இப்படி வாருங்கள், இதுவரையும் எங்கு சென்றீர்கள்; நீங்கள் ஆய்ந்த நாவற்பழத்தை இங்கே தாருங்கள்" என்று கேட்டார்.

"எம்மிடம் பசியுந் தாகமுந்தான் உண்டு; வேறொன்றுமில்லை", எனப் பதிலளித்தான் அழகசுந்தரன்.

"அப்படியாயின் அவற்றை நீங்களே வைத்துக் கொள்ளுங்கள். குறித்த நேரத்துக்கு வாராமையால் உங்களுக்கு இங்கு உணவில்லை. போய் ஒரு மூலையில் இருங்கள். முதியோர் சொல்லைத் தட்டி நடப்பதால் வரும் பயன் இதுவே" என்றனர்.

எனினும் ஈற்றில் அவருக்கும் அம்முதியவர் உணவளித்தார்.

அவ்வாறு அற்றைப்பொழுது கழிந்தது. அழகசுந்தரன் காட்டிலே தான் தேடிப்போன நாவற்கனிகளைப் பெறாது விடினும் பிறிதொரு பொருளைப் பெற்றான். அதுவும் காட்டிலேயே வளர்ந்தது. திரும்பி வீடு வந்தெய்தியதும் தனது பாட்டுப் பொத்தகத்தை எடுத்துப் பின்வருஞ் செய்யுளை எழுதினான்.

1. அங்கு தோன்று மருமலைக் கப்புறம்
பொங்கு காற்றுப் பொருதியோய் வுற்றது
தொங்கு காவின் தொகுமரக் கொம்பர்க்கீழ்த்
தங்கி நிற்குந் தவலறு கன்னியே.

2. கோதில் காட்டிற் கொடிநடு நின்றனள்
தீதி லின்பந் திகழுறு கால்பொர
ஊதி வண்டுக ளொன்றிநற் பண்ணொடு
மாதின் பக்க மருவிப் பறந்தவே.

3. ஒலியில் காட்டினு ளோதுமெப் பக்கமும்
நலிவி லாதுமெய் நாடியே பார்ப்பள்காண்
பொலிவி னுடைவள் பொங்கு சுரிகுழல்
மலியு மொண்கதிர் மண்ட விளங்குமே.

4. ஒன்றிச் சேய்மையி லோங்கு மரத்தினுள்
நின்று மேகுயில் நீடவே கூவிடும்
தென்றல் சேர்வனத் தெய்வத்தின் கண்ணென
நன்று தேருவன் நங்கைதன் கண்ணையே.

எனவே தன் உள்ளத்தைக் கொள்ளை கொண்ட காதற்சிறுமியாயது மட்டுமன்றி மெல்ல மெல்ல விரிந்து வரும் தனது உலக வாழ்க்கைக்குக் கமலநாயகி பேரழகினையும் சிறப்பையும் கொடுக்கும் ஓர் இன்பத் தோற்றமாயினள் எனவும் உணர்ந்தான்.

---

## தெருவோரத்தில் குழந்தை நின்றது

தீபாவளிப் பெருநாளுக்கு முதல்நாட் பின்னேரம் அழகசுந்தரனும் வேறு சில மாணவரும் பட்டணத்திலுள்ள உண்டிச்சாலையொன்றில் ஒரு மேசைக்கருகில் அமர்ந்திருந்தனர். அப்பொழுதுதான் இருளத்

தொடங்கியது. அவ்வுண்டிச்சாலையின் சுவர்களிலிருக்கும் விளக்குகள் எரியத் தொடங்கிவிட்டன. அன்று அவ் வேளையில் அப்பட்டணத்துப் பல்கலைக்கழக மாணவரைத் தவிர வேறு யாரும் அங்கு உணவருந்த வந்திலர். அதனால் அவ்வுண்டிச்சாலையில் உணவு பரிமாறும் ஏவலாளருட் பலர் அங்குள்ள தூண்களிலும் சுவர்களிலும் சாய்ந்த வண்ணம் வேலையின்றிக் கொட்டாவிவிட்டுக் கொண்டிருந்தனர்.

மாணவர் அமர்ந்திருந்த மேசையினின்றும் ஒரு 'விசிக்கி'ப் போத்தலின் கிடைச்சி மூடி டப்பெனச் சீறி மேலெழுந்தது. அங்கிருந்த மாணவர் ஒவ்வொருவருக்கும் 'விசிக்கி' வழங்கப்பட்டது.

உண்டிச்சாலையின் வாசற்கதவோரமாக ஓர் இன்னிசை எழுந்தது. பட்டணத்துத் தெருத்தோறும் பாட்டுப்பாடிப் பணம் பெற்று வாணாள் கழிக்கும் பாணனொருவன் தன் கையிலே வயலினொன்றை வைத்து இழுக்க, சித்தார் ஒன்றைக் கையிலேந்தியவளாய் அழகிய பாடினி ஒருத்தி இனிய பாட்டொன்றைப் பாடிக்கொண்டு உண்டிச்சாலையின் வாசலில் வந்து நின்றாள்.

அப்பாட்டினைக் கேட்டதும் மேசையருகிலிருந்த மாணவர் யாவரும் பரபரப்போடு எழுந்து வாயிலருகே வந்து இன்பங் கொழிக்கும் அவ்விசையமுதைச் செவியாற் பருகித் தேன்பிலிற்றும் அவள் தீஞ்சுவைப் பாணியின் மயங்கியவராய்த் தம்வயமிழந்து தலையசைத்து நின்றனர். காத்திராத வண்ணம் அவர்க்குக் கிடைத்த இவ்விசை விருந்து சற்று நேரத்தில் முடிந்தது.

அப்பொழுது அவருள் ஒருவன் ஒரு வெண்பொற்காசை அவளுக்கு அளித்தனன். அவளும் முகமலர்ச்சியுடன் அவனுக்கு நன்றி கூறிவிட்டு அதனை வாங்கித் தன் மடிக்குள் வைத்தாள். அப்பொழுது துரைமகன் என்னும் தோற்றமுடைய காளையொருவன் அவ்விள நங்கைக்கு விசிக்கி நிறைந்த கிளாசு ஒன்றை நீட்டி, "என்செல்வி, பாடினி நங்காய்! இதை நீ பருகுதி" என்றான். அதைக் கேட்டதும் அவள் இறுமாப்போடு அவனை ஏற இறங்கப் பார்த்துவிட்டு, "எனக்கு உது வேண்டியதில்லை" என்று விடையிறுத்தாள். இதனால் தன் செருக்குச் சிறிது சிதைந்த அத்துரைமகன், "சரி போகட்டும்; இன்னும் ஒரு பாட்டுப் பாடு; நான் கேட்க விரும்புகின்றேன்" என்று கூறிக்கொண்டு ஒரு வெண் பொற்காசை அவள் முன் சுண்டி எறிந்தான்.

அவ்விளம்பெண்ணோ அதனைச் சற்றேனும் பொருட்படுத்தாது தன் கையிலிருந்த சித்தாரைத் தடவிக்கொண்டு வாளா நின்றாள். அருகில் நின்ற பாணன் குனிந்து அவள் காதிற்குள் ஏதோ கூறினான். "அவள் தலையை அசைத்து உவர் கேள்விக்கிணங்கி நான் பாடமாட்டேன்," என்று விடையிறுத்தாள்.

அப்பொழுது அழகசுந்தரன் தன்னருகு நின்ற நண்பரை விலக்கிக்கொண்டு கையிற் கிளாசை ஏந்திய வண்ணம் விறுக்கென அவள் எதிரில் வந்து நின்றான்.

"உமக்கு என்ன வேண்டும்?" என்று அப்பாடினி அவனை மிடுக்கோடு கேட்டாள்.

"உன் கருவிழிகளைப் பார்க்க விரும்புகின்றேன்."

"என் விழிகளைப் பார்ப்பதால் உமக்கு ஆவதென்ன?" அப்பொழுது அழகசுந்தரன் பார்வை பளிச்செனே அவள்மேற் பாய்ந்தது.

"அவ்விழிகளின் நோக்குப் பொய் நோக்கு. அதை யான் நன்கறிவேன்." என்று அவள் கூறிக்கொண்டு தன் கன்னத்தைச் சாய்த்துக் கையில் வைத்தவண்ணம் அவனைக் குறிப்பாய் நோக்கினள்.

அழகசுந்தரன் தன் கிளாசை வாயில் வைத்தான். "இது உன் அழகிய பொல்லா விழிக்கு" என்று சொல்லிக்கொண்டு அதற்குள் இருந்த விசிக்கியைக் குடித்தான். அதைக்கண்டு அவள் புன்னகை புரிந்தாள். உடனே குடியின் வயத்தனாய் நின்ற அழகசுந்தரன் அவளை நோக்கி, "அணங்கனையாய்! இசைத் தேனைப் பொழியும் நின் திருவாயால் இவ்வுயர்ந்த தேறலைப் பருகுதி; இது நின் இசையின் கனிவை மேலும் பெருக்கி நின்னை ஒப்புயர்வற்ற பாடினியாகத் திகழச் செய்யும், இது திண்ணம்" என மொழிந்தான். அதைக் கேட்ட அப்பாடினி தலையை அசைத்து, "உது எனக்கு வேண்டாம். நீயே பருகிக்கொள்" என விடையிறுத்தனள்.

அழகசுந்தரன் "அப்படியானால் ஒரு பாட்டுப்பாடு; சித்தாரின் இன்னிசையோடு நின் மிடற்றுப் பாடலை யான் மீண்டுமொரு முறை என் செவிகளாற் பருக விரும்புகிறேன்" என்றான்.

அதைக் கேட்ட நண்பர் யாவரும் "கேளுங்கள்! கேளுங்கள்!" என்று கூறிக் கைகொட்டி ஆரவாரித்தனர்.

உடனே அவள் தன்சித்தாரின் நரம்பைத் தடவிக் கொண்டு உணர்ச்சி ததும்பும் அழகான குரலில் பின் வரும் பாட்டைப் பாடினாள்:

கருவிழிகள் தனைநோக்கிக் காதலினாற் கட்டுண்டு
சிறுமியென தழகதனிற் சிக்கினேன் காணென்ருய்
சிறுமியென தழகதனிற் சிக்கிநின்ரு யாமாகில்
கருவிழிகள் தாம்வாடிக் கவினழிந்து போங்காலும்
திருவனையா யென்றழைத்துச் சேர்த்தெனைநீ யணைப்பாயோ.

இளமையதிற் றிளைத்திடுங்கா லெனைநோக்கி யின்பமதாய்
வளமுறவே யன்புமொழி மகிழ்ந்துமிகச் சாற்றிடுவாய்
வளமுறநீ யன்புமொழி மகிழ்ந்தெனக்குச் சாற்றிடினும்
இளமையது நாளெழிந்தே இறந்தீமம் புகும்போதில்
உளமொன்றி யென்னுடனே உத்தமனே புகுவாயோ.

அதனல்,

காதல்மிகு களிப்புறவே கருத்துணர்வு தானழிந்து
மாதரா ளெனைநோக்கி மையல்மொழி பலபுகன்ருய்
மாதரா ளெனைநோக்கி மயக்கமொழி புகன்றிடினும்
காதலொடு களிமயக்குக் கைமிகுந்த இளமையது
வீதலுறும் பகட்டினைச்செய் வெளிமயக்காம் கனவதுவே.

இப்பாட்டை அவள் பாடிக்கொண்டிருக்கும்போது அங்கு நின்ற மாணவர் யாவரும் அதன் உணர்ச்சிப் பெருக்கில் ஈடுபட்டவராய் மெய்மறந்து அங்காந்த வாயுடன் விழித்த கண் இமைக்காது அவளையே நோக்கியவண்ணம் அசையாது நின்றனர். ஈற்றில் அவள் பாட்டு நின்றது. சற்றுநேரம் ஆழமான அமைதி அங்கு நிலவியது. சில விஞடிகள் சென்றதும், "தேனூறு செஞ்சொல் இளஞ்செல்வி! குழலும் யாழும் குழைத்த நின் குரலால் மீண்டுமோர் இசையமுதெம் செவி குளிரப் பொழிவாயோ?" என அங்குக் குழுமியிருந்தோருள்

ஒருவன் தழுதழுத்த குரலில் அவளை இரந்து வேண்டினன். அதைக் கேட்டதும் அப்பாடினி "ஓமெ"ன்று தலையசைத்துப் பின்வரும் பாட்டைப் பாடினள்.

இணையிலா மங்கையென்றே யின்றுநீ யெனைநினைந்தாய்
துணைவராய் வாழுநாளில் தோன்றலே யெனக்குரியாய்
இணைபிரிந் துலகமீதில் யாக்கைவிட் டேகும்போழ்தில்
புணையிலாத் தமியளாகிப் போகுவன் நினைவிடுத்தே.

இதனைப் பாடிமுடித்ததும் அவள் அழககசுந்தரனைக் கடைக்கண்ணால் நோக்கினாள்.

அவ்வேளையில் புதியவனொருவன் அக்கூட்டத்துள் வந்து சேர்ந்தான். "சுந்தரம்! உன்னைத்தேடி அறைக்குப் போய் வருகிறேன்; அங்கு யாருமில்லை; ஆனால் அதற்குள் இரண்டு பாசல் இருக்கக் கண்டேன்: ஓகோ! நாளைக்குத் தீபாவளியல்லவோ! அதுதான் ஊரிலிருந்து ஏதோ வந்திருக்கின்றது போலும்" என்றனன். அதைக் கேட்டு அழககசுந்தரன், "தீபாவளிக்கு எனக்கு இப்போது ஊரிலிருந்து ஒன்றும் வருவதில்லை" என மொழிந்தனன்.

"ஏன் இல்லை? இப்போதும் வந்திருக்கிறது. நான் சொன்னது பொய்யோ மெய்யோ என்று உன் அறைக்குப் போய்ப் பார்."

உடனே அழககசுந்தரன் அங்கு நின்ற ஏவலாளனொருவனை வரும்படி தன் விரலாற் பணித்து, அவனிடம் தன் கையிலிருந்த கிளாசைக் கொடுத்துவிட்டு வெளியே போக உன்னினன். அவன் நிலையைக் கண்டதும், "சரி, இப்போது என்ன செய்யப்போகின்றாய்?" என்றனள் அவ்விளம்பெண்.

"வெளியே போய் இதோ ஒரு கணப்பொழுதில் வந்துவிடுவேன்" என்றனன் அழகசுந்தரன். இதைக் கேட்டதும் அவள் தன் முகத்தைச் சுளித்தாள். தன் கண்ணினுல் காமக்குறிப்புள்ள பார்வையை வீசிக் கொண்டு, "போகாதே, நில்" என்று மெல்லெனக் கூறினுள்.

அழகசுந்தரன் சற்றுத் தடுமாறினுன். பின்னர் அவன், "முடியாது, போகத்தான் வேண்டும்" என்று உறுதியான குரலில் மொழிந்தனன்.

அப்பொழுது அவள் தன் காற்பெருவிரலால் அவன் காலில் மெதுவாகத் தட்டி, "அப்படியானுல், போ! போ! நீயும் ஏனையோரைப் போன்றவனே; உன் போலி யரால் ஒரு பயனுமில்லை" என்று கூறிவிட்டு மறுபக்கம் திரும்பினுள். அழகசுந்தரன் அவ்விடத்தை விட்டு வெளியே சென்முன்.

தெருவில் மாலையிருள் செறிந்துவிட்டது. கார் காலத்துலாவும் குளிர்காற்று அவன்மேல் வீசியது. சில வீடுகளின் மண்டபங்கள் பலநிற வெளிச்சக் கூண்டு களால் அழகு செய்யப்பட்டிருந்தன. அவற்றின் சாளரத்து வழியே நோக்கியபொழுது அவை மாவிலை களாலும், தோரணங்களாலும், மலர் மாலைகளாலும் கவின் செய்யப்பெற்று விளங்கியதைக் கண்டான். அவ் வீடுகளினின்றும் சிறுபிள்ளைகள் ஊதி விளையாடும் குழலோசையும் அவர்தம் களியாட்ட ஒலிகளும் இடை யிடை வந்துகொண்டிருந்தன.

அப்பட்டணத்துள்ள இரந்துவாழ்சிறுர் அவ் வீடுகள்தோறும் சென்று சென்று அவற்றின்

கதவண்டை நின்று, தாமாகவே கொண்டாடி இன்புறுதற்குக் கொடுத்துவைக்காத அவ்விழாச் சிறப்புக்களைக் கண்ணுற முயன்று அங்கும் இங்கும் அலைந்து திரிவர். சில வீடுகளிலுள்ளார் கதவைத் திறந்து அச்சிறுவர் கூட்டத்தை ஏசி வெருட்டித் துரத்துவர். அப்போது அக்கூட்டம் தூரத்தே ஓடி இருளடைந்த தெருவோரத்தில் மறைந்து போம். சில வீட்டுத் தலைவாசலில் அவ்வவ்வீட்டுச் சிறுவர் சிறுமியர் குழுமி நின்று சீனவெடி சுட்டு ஆரவாரிப்பர்.

ஆனால் அந்நிகழ்ச்சிகளொன்றையும் அழகசுந்தரன் கவனித்திலன். நேரே விரைந்து ஒன்றன்பின் ஒன்றாகத் தெருக்களைக் கடந்து ஈற்றில் தான் தங்கும் வீட்டினை அடைந்தனன். அங்கு ஒரே இருட்டாய் இருந்தது. இருளினூடாகத் தட்டித் தடவி ஒருவாறு தன் அறையைச் சேர்ந்தான்.

சேருமுன்னரே ஓர் இனிய மணம் அவனை வரவேற்றது. அப்பொழுது தாயின் நினைவு அவன் மனத்தில் எழுந்தது. தீபாவளி நாட்களில் அவள் பலவகையான இனிய பணியாரங்களைச் சுடுவது வழக்கம். தன்னை வரவேற்ற மணம் அப்பணியாரங்களின் மணம் போல அவனுக்குத் தோன்றியது. கைநடுக்கத்தோடு அறையின் விளக்கை ஏற்றினன். ஏற்றியதும் மேசையின்மேல் இரு பாசல்கள் இருப்பது தெரிந்தது. அவற்றுள் ஒன்றைத் திறந்தான். அதினின்றும் சிப்பிப் பணியாரம் விழுந்தன. அப்பாசலின் அடிப்பக்கத்தைத் தடவிப் பார்த்தபோது அங்கு உழுத்தம் பணியாரம், பொரிவிளங்காய், சீனிஅரியதரம் ஆகியவை இருக்கக் கண்டனன்.

அதன் அருகிலிருந்த மற்றப் பாசலுக்குள் வேட்டி, சால்வை, சட்டை, கைக்குட்டை ஆகியவை இருந்தன. அவற்ேறாடு அவன் தாயும் கமலநாயகியும் எழுதிய கடிதங்களும் இருந்தன. அழகசுந்தரன் கமலநாயகி எழுதிய கடிதத்தையே முதல் திறந்தான். அதில் பின் வருமாறு வரைந்திருந்தது:

"உனக்கு அனுப்பிய சிப்பிப் பணியாரத்தைச் செய்வதற்கு உன் தாயாருக்கு உதவி புரிந்தது யாரென்று யான் கூறுமலே உனக்கு விளங்கும். உனக்கு அனுப்பியிருக்கும் கைக்குட்டைகளைத் தைத்து அழகு செய்ததும் அதே ஆள்தான். இம்முறை. எங்கள் வீட்டில் தீபாவளிக் கொண்டாட்டம் முன்போல் அவ்வளவு பெரிதாயிராது. வீட்டிலே இப்பொழுது கலகலப்பு அதிகமில்லை. அம்மாவும் நானும் இரா உணவை முடித்துவிட்டு ஒவ்வொரு நாளும் ஏழு மணிக்கே படுக்கைக்குப் போய்விடுவோம். நீ இங்கு இல்லாததால் எங்களுக்கு மிகத் தனிமையாய் இருக்கிறது.

"அன்றியும், நீ எனக்கு அன்பளிப்பாய்த் தந்த நாகணவாய் சென்ற ஞாயிற்றுக்கிழமை இறந்துவிட்டது. அத்துயரினுல் நான் மிக அழுதுவிட்டேன். அப்பறவையை நான் கண்ணுங் கருத்துமாக எவ்வளவு அன்போடு வளர்த்துவந்தேன் தெரியுமோ?

"எமது வீட்டுக்கு இப்பொழுது மிகுதியாய் ஒருவரும் வருவதில்லை. உன் நண்பர் சாம்பசிவம்தான் இடையிடை வந்து போவார். 'அவரணியும் சட்டையைப் போலத்தான் அவரும்' என்று முன்னொரு நாள் எனக்குக் கேலியாய்ச் சொன்னுய்.

அவரைக் காணும்போதெல்லாம் நீ கூறிய அச்சொற்கள் என் நினைவுக்கு வரும். உண்மையில் அவர் அணியும் சட்டை எவருக்குத்தான் சிரிப்பை விளைக்காது? அடடா! தெரியாமல் எழுதிவிட்டேன். நான் இப்படி எழுதியிருப்பதாக அம்மாவிடம் சொல்லிவிடாதே. இதை அறிந்தால் அவருக்குக் கோபம் பிறக்கும்.

"இம்முறை நான் உன் அம்மாவுக்குத் தீபாவளிப் பரிசிலாக என்ன கொடுப்பேன் என உன்னால் கூற முடியுமோ? முடியாது. ஆகையால் நான் சொல்லு வேன், கேள். என்னையே கொடுக்கப்போகின்றேன். உன் நண்பன் சாம்பசிவம் என்னைப்பார்த்து ஒரு கடுதாசி மட்டையில் என் உருவ படம் வரைகின்றார். அவர் அவ்வாறு வரைதற்கு அவருக்குமுன்பாக இதுவரை மூன்று முறை இருந்துவிட்டேன். ஒவ்வொரு முறையும் ஒவ்வொரு மணி நேரம் இருக்கவேண்டியதாயிற்று.

"அவ்வளவு அறிமுகமில்லாத ஒருவர் படங் கீறுவதற்காக என் முகத்தை உற்றுநோக்க விடுவதற்கு எனக்கு அடியோடு மனமில்லை. என்றாலும் என்ன செய்வது! உன் தாயாருக்கு என் படத்தைக் கொடுத்தால் அவர் அதைப் பார்த்து மிக மகிழுவாரென்று சொல்லி என்னை அம்மா நெருக்கினர். நிற்க;

"நீ எனக்குக் கூறியபடி செய்யத் தவறிவிட்டாய். கதை எழுதி அனுப்பவில்லை. இதைப்பற்றி நான் பல முறை உன் அம்மாவிடம் குறைகூறினேன். அதற்கு அவர் இப்படிப்பட்ட சிறு அலுவலைச் செய்ய உனக்கு இப்பொழுது நேரமிராது. பல பெரிய காரியங்களைச் செய்துமுடிக்க வேண்டியிருக்கும்" என்று சொன்னர்.

என்றாலும் அதை நான் நம்பவில்லை. வேறென்னவோ காரணம் இருக்கவேண்டுமென என் மனம் சொல்லுகின்றது."

அதன்பின் அழகசுந்தரன் தன் தாயின் கடிதத்தைப் படித்தான். இரு கடிதத்தையும் படித்து முடித்தபின் அவற்றை மடித்து ஒருபுறத்தே மெல்ல வைத்தான். அப்பொழுது அவன் மனதில் வீட்டு நினைவு எழுந்தது. கலங்கிய கண்ணைத் தன் கையினால் துடைத்துவிட்டு நெடுநேரமாய் ஏதோ முணுமுணுத்துக்கொண்டு தன் அறையில் அங்குமிங்கும் உலாவினான். அப்பொழுது பின்வரும் பாட்டைத் தனக்குட் பாடினான்.

நேர்வழியாற் போகாது நெடுநேரந் தப்பவிட்டேன்
ஓர்வழியு மறியாம லொன்றியாய்த் தயங்குகின்றேன்
சீர்மிகுந்த தெருவருகே சிறுகுழந்தை தேம்பிநைந்து
நீர்நிறைந்த கண்ணுடனே நின்றழைப்பள் வீட்டினுக்கே.

சிறிது நேரத்தின்பின் தனது மேசையருகிற் சென்று சில வெண்பொற்காசுகளை எடுத்துக்கொண்டு திரும்பவும் அறையினின்றும் வெளியே போய்த் தெருவழியால் நடந்து சென்றான். அப்போது தெருவெல்லாம் அமைதி நிலவியது. குளிர்காற்று வீசிக்கொண்டிருந்தது.

இளையோர் முதியோர் யாவரும் தத்தம் வீடுகளில் ஒன்று சேர்ந்து மறுநாட் கொண்டாட்டத்திற்கு வேண்டிய முன்னேற்பாடுகளை உளமகிழ்வோடு செய்து கொண்டிருந்தனர். ஆனால் அவன் மனதில் மட்டும் மகிழ்ச்சியோ அன்றி அமைதியோ நிலவவில்லை. குழப்பமான எண்ணங்கள் தோன்றித்தோன்றி அவன்

மனதை உறுத்திக்கொண்டிருந்தன. இடையிடையே பெருமூச்செறிந்துகொண்டு தயங்கித்தயங்கி நடந்தனன்.

பின் உண்டிச்சாலையினருகே சென்றான். அங்கு அவன் நண்பர் பாட்டுப்பாடி ஆர்ப்பரிக்குமோசையும் மேசைகளில் தட்டும் தாளத்தினோசையும் காதில் வீழ்ந்தன. அப்பொழுது அவ்வுண்டிச்சாலையினின்று வெளியே ஒருவன் வந்தான்.

அவன் வருவதைக் கண்டதும் அழகசுந்தரன் தெருவோரமாய் இருக்கும் வீடுகளின் நிழலில் ஒதுங்கி எட்ட அகன்றான். அதன்பின் ஒரு நகைக் கடையினுட் புகுந்து நகையொன்றை வாங்கிக்கொண்டு வந்தவழியே திரும்பினான்.

அவன் வீட்டுக்குச் சற்று தூரத்திலே இருக்கும் வேறொரு வீட்டின் கதவருகே கிழிந்த கந்தை உடையணிந்த பெண்குழந்தையொன்று அக்கதவைத் திறக்க முயன்று கொண்டு நின்றது. அதை அவன் கண்டு, “யான் திறந்து விடலாமோ?” என்று கேட்டான்.

அதற்கு அக்குழந்தை ஒன்றும் பேசாது கதவை விட்டு விலகியது. அப்பொழுது அழகசுந்தரன் கதவைத் திறந்து உள்ளே எட்டிப் பார்த்தான். அங்கு பெண்கள் சிலர் ஓர் அடுப்பைச் சுற்றியிருந்து, சிரித்துச் சிரித்து உரையாடித் தீபாவளிக் கொண்டாட்டத்தின் பொருட்டுப் பணியாரஞ் சுட்டுக் கொண்டிருப்பதைக் கண்டான். கண்டதும் கதவை மூடிவிட்டு அக்குழந்தையை நோக்கி, “வேண்டாம் வேண்டாம், நீ அங்கு போகாதே. அவர்கள் உன்னை ஏசித் துரத்திவிடுவார்கள். என்னோடு வா, நீ விரும்பும் பணியாரங்களை

நானே தருவேன்'' என்று கூறி அச்சிறுகுழந்தையைக் கையிற்பிடித்துக் கூட்டிக்கொண்டு தானிருக்கும் வீடு சென்றான்.

அவன் ஏற்றிய விளக்கு இன்னும் மங்கலாக எரிந்து கொண்டிருந்தது.

“இதோ பார், இங்கே சில பணியாரங்கள் இருக்கின்றன” என்று கூறிக்கொண்டு பாசலிலே இருந்த பணியாரம் முழுவதையும் அவள் கையிற் கொடுத்தான். எனினும் கமலநாயகி சுட்ட சிப்பிப்பணியாரத்தை மட்டும் அவன் கொடுக்கவில்லை.

பணியாரத்தைப் பெற்ற அக்குழந்தையைப் பார்த்து, “சரி, வீட்டுக்கு ஓடு. உன் தாயாருக்கும் அதிற் கொஞ்சம் கொடு” என்று சொன்னான்.

அப்பொழுது அக்குழந்தை வெட்கமும் நன்றியும் கலந்த பார்வையோடு அவன் முகத்தை நோக்கியது. அத்தகைய அன்பை அது இதற்குமுன் பெற்றதில்லை. எனவே அக்குழந்தையால் ஒன்றும் பேசிக்கொள்ள முடியவில்லை. ஒரு கணப்பொழுதில் திரும்பிப் பணியாரங்களையும் கொண்டு புள்ளுப் பறந்ததுபோல் தன் வீட்டுக்கு ஓடிச் சென்றது.

அதன்பின் அழகசுந்தரன் தன் மேசையினருகே போயிருந்து தன் தாய்க்கும் கமலநாயகிக்கும் கடிதங்கள் வரைந்தான். அன்று இராமுழுதும் கடிதம் வரைந்தது தான் அவனுக்கு வேலை.

எஞ்சிய பணியாரம் மேசையில் எறும்பு மொய்த்துக் கிடந்தன. அவற்றை அவன் கையால் தொட்டும்

பார்க்கவில்லை. காலைக்கதிரவன் தன் கதிர்களை விரித்துக் கொண்டு குணகடலினின்றும் எழுந்தனன். இள வெய்யில் அவனிருக்கும் அறைச் சாளரக்கதவில் விழுந் ததும் விடிந்தது என அறிந்தான். அப்பொழுது எதிரேயுள்ள கண்ணுடியொன்றில் தன்னை நோக்கினுன். இயற்கையாய் ஒளியுடன் விளங்கும் தன்முகம் ஒளி குன்றி வாடியிருப்பதைக் கண்டான்..

## வீடு

தைப்பொங்கல் விடுமுறை வந்தது. அவ் விடுமுறையைக் கழிப்பதற்காக அழகசுந்தரன் ஊருக்குப் போனுன். ஊருக்குச் சென்ற அடுத்த நாட்காலை கமலநாயகி வீட்டுக்கு ஏகினுன்.

அவனைக் கண்டதும் கமலநாயகி முறுவல் பூத்த முகத்தோடு வரவேற்ருள்.

"நீ இப்பொழுது முன்னரிலும் எவ்வளவு வளர்ந்து விட்டாய்?" என்று அவளைப் பார்த்து அழகசுந்தரன் கூறினன். அதைக் கேட்டதும் அவள் நாணத்தினுல் தலைகுனிந்தாள். அவன் கூறியதற்கு ஒரு மறுமொழி யும் புகன்றிலள். தன்னேடு நன்ருய் நெருங்கிப் பழகிய அவள் இப்பொழுது ஏன் இவ்வாறு நாணிக்கோணு கின்ருளென்பது அவனுக்கு விளங்கவில்லை. அதனுல் அவன் மனதில் அவளைப்பற்றி ஓர் ஐயவுணர்வு எழுந்தது.

அவ்விடுமுறைக் காலத்தில் அவன் அவளை ஒவ் வொருநாளும் வீட்டில் வந்து பார்ப்பது வழக்கம். எனினும் அவளைப் பற்றி ஒருவகை ஐயம் அவன் மனதில் தட்டிக்கொண்டேயிருந்தது. இருவரும் தனிமையாயிருந்து உரையாடும்போது சிலவேளைகளில்

ஒரு காரணமுமின்றி அவ்வுரையாடல் நின்றுவிடும். அது அவன் உள்ளத்தை வருத்தியது. அதனால் அவளோடு அளவளாவும்போது தன்னாற்கூடிய அளவு முயன்று தம் பேச்சு இடையே நின்றுவிடாது பார்த்துக் கொள்வான்.

காலத்தை வீணே கழியாது இவ்விடுமுறை நாட்களில் பயனுடைத்தாய வேலையொன்றினைச் செய்ய வேண்டுமென்பது அவன் எண்ணம். அதனால் கமலநாயகிக்குப் பயிர்நூலைக் கற்பிக்க முனைந்தான். இக்கலையே அவன் பல்கலைக்கழகஞ் சென்ற காலத்து முதன் முதல் ஆவலாய்ப் படித்தது. கமலநாயகி கூரிய நுண்ணறிவு படைத்தவளாதலின் அவன் சொல்லிக்கொடுத்தவற்றையெல்லாம் எளிதில் அறிந்து கொண்டாள். இக்கலையைப் படிப்பதற்காக இருவரும் காலை வேளைகளில் ஒன்று சேர்ந்து வயல் தோட்டம் முதலிய இடங்களுக்குச் சென்று செடி, கொடி, இலை, பூ ஆகியவற்றைச் சேர்த்துப் பெட்டிகளில் கொண்டுவருவர். அங்ஙனம் கொண்டு வந்தவற்றையெல்லாம் பின்னேரங்களில் முறைமுறையாய் வகுத்துவைத்து ஆராய்வர்.

ஒருநாள் பயிர்நூல் கற்பிப்பதற்காக அழகசுந்தரன் கமலநாயகி இருந்து படிக்கும் அறைக்குள் வந்தான். அப்பொழுது கமலநாயகி அவ்வறைச் சாளரத்தருகில் நின்று அங்கிருக்கும் குருவிக்கூட்டுக்குள் சில தின்பண்டங்களைப் போட்டுக்கொண்டு நின்றாள். இந்தக் கூட்டை அவன் முன்னொருபோதும் அங்கு கண்டதில்லை. அதனுள்ளே ஒரு கிளி நின்று தன் சிறகை அடித்தடித்துக் கத்திக்கொண்டு கமலநாயகி கொடுத்த தின்பண்டங்களை வாங்கித் தின்றது.

தான் அவளுக்களித்த நாகணவாய்க்கூடு தொங்கிய இடத்தில் கிளிக்கூடு தொங்குவதைக் கண்ட அழக சுந்தரன், "என் நாகணவாய் இப்போது ஒரு கிளியாய் மாறிப் பிறந்துவிட்டதோ?" என்று புன்னகையோடு கேட்டான்.

"நாகணவாய்ப் பறவை அவ்வாறு மாறிப் பிறப்ப தில்லை. உன் நண்பன் சாம்பசிவம் இக்கிளிக்கூட்டைக் கமலநாயகிக்கு அன்பளிப்பாகத் தன் தோட்டத்தி லிருந்து இன்று உச்சிவேளை தான் அனுப்பிவைத்தான்" என்று அவ்வறைக்குள் நாற்காலியொன்றில் பெட்டிக்குச் சாய ஓலையினால் வன்னம்போட்டுப் பொத்திக்கொண்டு அமர்ந்திருந்த அவள் அன்னை கண்ணகையார் கூறினார்.

"என்ன தோட்டம்?"

"என்ன, உனக்குத் தெரியாதோ?"

"எதை?"

"அவன் தகப்பனார் தம்முடைய பூஞ்சோலைத் தோட்டத்தை ஒரு மாதத்துக்குமுன் அவனுக்குக் கொடுத்துவிட்டாரல்லவோ?"

"இதைப்பற்றி எனக்கு நீங்கள் இதுவரை ஒன்றுங் கூறவில்லையே."

அதற்குக் கண்ணகையார் கூறுவர்; "அப்படிக் கூறுவதற்கு உன் நண்பனைப்பற்றி நீ ஒன்றுங் கேட்க வில்லையே. அவனோ அருமையான அறிவுள்ள பையன்."

இவ்வாறு கூறிவிட்டுக் கண்ணகையார் கோப்பி போடுவதற்காக அவ்வறையினின்றும் வெளியே

போனார். கமலநாயகி தனக்குப் பின் நின்ற அழக சுந்தரனைத் திரும்பிப்பாராது, "கொஞ்சம் பொறு, கையிலிருப்பதைக் கொடுத்து முடித்துவிட்டு இதோ வந்துவிட்டேன்" என்று கூறினாள். அழகசுந்தரன் அதற்கு ஒரு பதிலுங் கூறவில்லை. இப்படிப் பேசா திருத்தல் அவன் வழக்கமன்று. அதனால் கமலநாயகி அவனைத் திரும்பிப் பார்த்தாள். திடீரென்றெழுந்த மனக் கலக்கத்தை அவன் கண்கள் காட்டின. இப்படியான நிலையில் அவனை அவள் ஒருபோதுங் கண்டதில்லை.

"என்ன, ஒருமாதிரி இருக்கிறாய்?" என்று வினவிக் கொண்டு அவள் அவனருகே போனாள்.

"ஆர், நானோ?" என்று அழகசுந்தரன் கனா உலகி லிருப்பவன்போலக் கூறினான். அவன் கண்கள் அவள் கண்களைப் பார்த்தபோதிலும் அவன் எண்ணங்கள் வேறெங்கோ இருந்தன.

"உனக்கு ஏதோ கவலை இருப்பதுபோல உன்முகம் காட்டுகிறது."

அப்பொழுது அவன், "கமலா! அந்தக் கிளி இங்கிருப்பதைப் பார்க்க என்னாற் பொறுக்கமுடிய வில்லை" என்றான்.

அவன் கருத்தை அறிந்துகொள்ளவியலாது கமல நாயகி அவனை வியப்போடு பார்த்து, "நீ சொல்லுவது எனக்கு விந்தையாய் இருக்கிறது" என்று சொன்னாள்.

அப்போது அவள் தாயார் கோப்பியோடு அவ்வறையினுள் வந்தார். மூவரும் பருகினர். அதன்பின் கண்ணகையார் வன்னம் பொத்திக்கொண்டிருந்த பெட்டியைக் கையில் எடுத்துக்கொண்டு ஒரு நாற்காலியில் அமர்ந்தார். அழகசுந்தரனும் கமலநாயகியும் தாம் முன்பு தோட்டத்திலேசென்று பிடுங்கிவந்த செடிகொடி முதலியவற்றை ஒழுங்குபடுத்தி வைத்து ஆராய்ந்து படிப்பதற்காக அடுத்த அறைக்குட் சென்றனர். பல இனப் பூக்களையுமெடுத்து அவற்றிலுள்ள பராகக் கருவிகளைக் கூர்ந்து நோக்கினர். தாம் சேர்த்துக் கொண்டுவந்த இலை பூ ஆகியவற்றுள் ஒவ்வோரினத்திலும் மாதிரிக்காக இவ்விரண்டைத் தெரிந்தெடுத்தனர். பின், அங்ஙனம் தெரிந்தெடுத்தவற்றைக் குறுக்கே கிழித்துச் சுருங்கவிடாது தம்மிடமிருந்த பெரிய கொப்பியின் ஒற்றைகளுக்கிடையே உலருமாறு படிய வைத்தனர்.

மாலை வெய்யில் மங்கலாக எரித்துக் கொண்டிருந்த அற்றைப் பிற்பகலில் எங்கும் அமைதி நிலவியது. அடுத்த அறையில் கண்ணகையார் பெட்டி பொத்தும்போது உண்டாகும் ஓசையும் அழகசுந்தரன் பயிர்க் குடும்பங்களின் பெயர்களைக் கமலநாயகிக்கு எடுத்துக் கூறும்போதும் அவள் அப்பயிர்களின் ஆங்கிலப் பெயர்களைப் பிழையாக உச்சரிப்பதைத் திருத்தும்போதும் உண்டாகும் ஓசையுமே இடையிடையே அவ்வமைதியைக் குலைத்தன.

இருவரும் தாம் சேகரித்த செடிகொடிகள் யாவற்றையும் ஒழுங்குபடுத்தி ஆராய்ந்து முடித்ததும் கமலநாயகி, "நில அல்லிப் பூவொன்றைப் பார்க்கவேண்டு

மென்று சிலநாளாக ஆவல் கொண்டிருந்தேன்; போன முறையும் அது எனக்குக் கிடைக்கவில்லை. இன்றைக் குங்கிடைக்கவில்லையே'' என்ருள்.

உடனே அழகசுந்தரன் தன் சட்டைப்பையிலிருந்து அழகிய சிறு பொத்தகமொன்றை எடுத்தான்; அதனைத் திறந்து அதனுள்ளே அழுத்திப் படியவைத்திருந்த உலர்ந்த மலர்க் கொத்தொன்றை எடுத்து, "இதோ பார் நீ கேட்ட நில அல்லிப் பூக்களை'' எனக்கூறினுன்.

அதைக் கமலநாயகி கண்டதும் அப்பொத்தகத் தைத் தன் கையிலே வாங்கிப் பார்த்தாள். அது நிறைய ஏதோ எழுதியிருந்தது. அப்பொழுது அவள், "நீ திரும் பவும் கதைகள் எழுதத் தொடங்கிவிட்டாயோ?'' என்று கேட்டாள்.

"அவை கதை அல்ல, பாட்டு'' என்ருன்.

கமலநாயகி பொத்தகத்தின் ஒவ்வொரு ஒற்றையை யும் புரட்டிப் பார்த்தாள். அங்ஙனம் பார்த்துக் கொண்டு போகும்போது ஒவ்வொரு பாட்டின் தலை யங்கத்தையும் கவனித்தாள்; 'சட்டம்பியார் அவனை ஏசியபோது', 'காட்டில் அவர்கள் வழி தவறியபோது', 'புத்தாண்டுக் கதை', 'அவள் முதலில் எனக்குத் திருமுகம் வரைந்தபோது' — பெரும்பான்மையான தலைப்புகள் இவ்வாறு தொடர்ந்து சென்றன.

கமலநாயகி இங்ஙனம் ஒற்றைகளைப் புரட்டிக் கொண்டு போகையில் அழகசுந்தரன் அவளைக் கூர்ந்து நோக்கினுன்; அவள் முகம் நாணத்தினுல் சிறிது சிறிதாகச் சிவந்தது. அவள் விழிகளைப் பார்க்கவேண்டு

மென்று பெரிதும் ஆவல் கொண்டானாயினும் அவள் நிமிர்ந்து பார்க்காமையினால் அவ்வாறு செய்ய அவனால் முடியவில்லை. ஈற்றில் கமலநாயகி ஒன்றும் பேசாது பொத்தகத்தை அவன் முன்னே மெல்ல வைத்தாள்.

"அப்படி அதைச் சும்மா தராதே" என்றான் அழகசுந்தரன்.

உடனே அவள் தன் பக்கத்தேயிருந்த தகரப் பெட்டியிலிருந்து துளசிக்கிளையொன்றை எடுத்தாள். "உனக்கு மிகவும் விருப்பமான துளசிக்கோட்டை இதனுள் வைக்கிறேன்." என்று கூறிக்கொண்டே பொத்தகத்தை அவன் கையில் திருப்பிக்கொடுத்தாள்.

விடுமுறையின் கடைசி நாளும் வந்தது. அழகசுந்தரனை வழியனுப்புவதற்கு அவனோடு கூடி மோட்டோர் வண்டி நிலையம் வரைக்கும் செல்வதற்குக் கமலநாயகி தாயிடமிருந்து அனுமதி பெற்றாள்.

அந்நிலையம் அவர் வீட்டிலிருந்து சிறிது தூரத்திலிருந்தது.

வீட்டிலிருந்து புறப்பட்டதும் இருவரும் அருகருகாய் அமைதியோடு நடந்தனர். இவ்வாறு வழி நடக்கும் போதெல்லாம் தன் மனதைத் திறந்து அவளுக்குக் கூறவேண்டுமென அழகசுந்தரன் பெரிதும் விரும்பினான். பலமுறை தான் எண்ணியவற்றைப் அவளுக்குக் கூற உன்னினான். ஒவ்வொருமுறையும் சொற்கள் வெளியே வராது அவன் மிடற்றை அடைத்தன.

ஆயினும் "தான் நினைத்தவற்றை வாய்விட்டுச் சொன்னாலன்றித் தன் வாழ்க்கைக்கு இன்பமும் ஆறுதலும் ஏற்படா" என்று நினைத்தான். ஆனால் எப்படிச் சொல்வதென்று அவனுக்குத் தெரியவில்லை. இம்மனக் குழப்பத்தினால் அவன் முன்னரிலும் மிக மெதுவாக நடந்தான்.

"இப்படி நடந்தால் வண்டி போய்விடும். நேரம் பத்து மணியாயிற்று" என்று கமலநாயகி கூறினாள்.

இவ்வாறு அவள் கூறிய பின்பும் அவன் முன் போல மெதுவாகவே சென்றான். கடைசியில் அழகசுந்தரன் விழுங்கி விழுங்கிப் பின்வருமாறு சொன்னான். "கமலா! சரியாக ஈராண்டுகளுக்கு என்னை இனி நீ காண மாட்டாய். எப்போதும்போல நான் திரும்பிவரும் நாளையிலும் என்மீது நீ கொண்டுள்ள அன்பு சிறிதேனும் குறையாதிருக்குந்தானே?"

அவள் தலையை அசைத்து அவன் முகத்தை அன்போடு நோக்கினாள்.

"சில வேளைகளில் நான் உன் சார்பாகவும் பேசி இருக்கிறேன்."

"என் சார்பாகவோ? யாரோடு?"

"அம்மாவோடு. நேற்றுப் பின்னேரம் நீ எங்கள் வீட்டிலிருந்து போனபின்பு நெடுநேரம் உன்னைப் பற்றியே பேசிக்கொண்டிருந்தோம். இப்போது நீ முன் இருந்ததுபோல் அவ்வளவு நல்லவனாய் இல்லை என்று தாம் எண்ணுவதாக அம்மா சொன்னார்".

அழகசுந்தரன் சிறிது நேரம் ஒன்றும் பேசாதிருந்தான். பின்பு அவன் அவள் இரு கைகளையும் பற்றிக் கொண்டு அவள் பிள்ளையுள்ளத்தைக் காட்டும் கண்களை உற்று நோக்கி, "நான் முன்போலவேதான்; இன்னும் நல்லவனே. நீ அதை நல்லாய் நம்பு கமலா! என்ன, நான் சொல்வதை நம்புகிருயா?"

"ஓம்" என்ருள் அவள்.

உடனே அவன் அவள் கைகளை விட்டான். ஒன்றும் பேசாது இருவரும் நடந்தனர். பிரியும் நேரம் கிட்டுவதை உணருந்தோறும் அவன் முகத்தில் துயரக் குறிகள் மேன்மேலும் மிகுந்து தோன்றின. அவன் விரைந்து நடந்தான்; அவளால் அவனேடு நடந்து கொள்ளமுடியவில்லை.

"என்ன இது? ஏன் இப்படி நடக்கின்ருய்?" என்ருள் அவள்.

தன் கண்களில் ஒருவகை ஒளி வீச அழகசுந்தரன் அவளைப்பார்த்து, "என்னிடம் ஒரு மறைபொருள் இருக்கின்றது, அது ஓர் அழகான மறைபொருள். ஈராண்டுகளில் நான் இங்கு திரும்பி வருவேன். அப் பொழுது அது உனக்குத் தெரியவரும்" என்றனன்.

அவ்வளவில் இருவரும் மோட்டோர் வண்டி நிலையத்தை அடைந்துவிட்டனர். வண்டி புறப்படும் நேரமும் ஆகிவிட்டது. அழகசுந்தரன் கமலநாயகியை நோக்கி, "போய் வருகிறேன் கமலா! நான் போய் வருகிறேன். மறந்துவிடாதே" என்ருன்.

அவள் தலையை அசைத்தாள்; பின், "சுகத்தோடு போய்வா" என்ருள். அழகசுந்தரன் வண்டியுள்

ஏறினன். மோட்டோர் வண்டி உறுமிக்கொண்டு புறப்பட்டது. புறப்பட்ட வண்டி ஒரு மூலையிற்சென்று திரும்பியது. அழககசுந்தரன் வண்டியினுள்ளிருந்து கமலநாயகியின் அழகிய உருவம் அசைந்தசைந்து வீடு செல்வதைக் கண்டான்.

## கடிதம்

ஏறக்குறைய ஈராண்டுகட்குப் பின் அழகசுந்தரன் பொத்தகங்களையும் காகிதங்களையும் தனக்கு முன் மேசையில் பரப்பிக்கொண்டு தன்னோடுகூடக் கற்கும் நண்பனொருவனை எதிர் பார்த்தவண்ணம் இருந்தான். யாரோ கதவில் தட்டும் ஒலி கேட்டது. "உள்ளே வரலாம்" என்றான் அழகசுந்தரன். அப்பொழுது தபாற்காரன் வந்து அவன் கையில் ஒரு கடிதத்தைக் கொடுத்துவிட்டுப் போனான்.

ஊரிலிருந்து வந்த பின்னர் அழகசுந்தரன் கமலநாயகிக்கு ஒரு கடிதமும் எழுதவில்லை. அவளும் அவனுக்கு எழுதியதில்லை. அப்பொழுது வந்தது அவள் கடிதமன்று; அது அவன் தாயின் கையெழுத்திலிருந்தது.

அழகசுந்தரன் அதை உடைத்து வாசித்தான். கடிதத்தில் பின்வரும் பகுதி அவன் கருத்தைக் கவர்ந்தது. "உனக்கோ இப்போது வயது வந்து விட்டது. வாழ்க்கையில் மக்களுக்கு ஆண்டுதோறும் புத்தம்புதிய அனுபவங்கள் வந்துகொண்டே இருக்கும். ஆனால் இளமைப் பருவத்தில் அவை யாவற்றையும் நன்மை பயக்கத் தக்கனவாக மாற்றிக்கொள்ளலாம். இங்கும்

பலப்பல மாற்றங்கள் நிகழ்ந்துவிட்டன. உன்னை நான் நன்கு அறிந்துள்ளேனாதலின் இவற்றைக் கேள்வி யுற்றதும் நீ பெரிதும் துயரடையக் கூடுமென எண்ணு கிறேன்.

"கடந்த மூன்று மாதங்களுக்குள் சாம்பசிவம் தன்னை மணம் முடித்துக்கொள்ளும்படி இரண்டுமுறை கமலநாயகியைக் கேட்டிருந்தான். எனினும் அவள் ஒருப்படவில்லை. அவனை மணப்பதைக் குறித்து அவள் நெடுங்காலமாக ஒரு முடிவுக்கு வரமுடியாதவளாயிருந் தாள். கடைசியாக அவனைக் கட்டுவதற்கு நேற்று ஒரு வகையாய் உடன்பட்டுவிட்டாள். அவளோ ஆண்டில் மிக இளையவள். விழுந்தடித்து இப்போது மணம் முடிக்க வேண்டிய வயதன்று. இன்னுஞ் சிறிதுகாலஞ் சென்றபின் முடிக்கலாம். ஆனால், மணம் விரைவில் நிகழப்போகின்றது. அது முடிந்தபின் மணமக்கள் பூஞ்சோலையிலுள்ள இல்லத்திற்குப் போக எண்ணி யிருக்கின்றனர். கண்ணகையாரும் அவர்களோடேயே போயிருக்க முடிவு செய்துவிட்டார்."

## பூஞ்சோலை

பல ஆண்டுகள் கழிந்தன. இளவேனிற்காலத்து ஒருநாள் பிற்பகல் வேளையில் காளைப்பருவத்தனான ஒருவன் இருமருங்கும் வளர்ந்தோங்கிய மரங்களின் நிழல் வீழும் தெருவழியே நடந்து சென்றனன். அத் தெரு கீழேயுள்ள பள்ளத்தாக்கை நோக்கிப் போய்க் கொண்டிருந்தது. வழிப்போக்கன் முகம் வெய்யிலினால் சிறிது கருகி யிருந்தது. ஆயினும் அது அவன் உடல் வளத்தையும் அக நலத்தையும் செவ்வனே காட்டியது.

உள்ளக்கருத்தின் ஆழத்தைக்குறிக்கும் அவன் கண்கள் தூரத்திலுள்ள பொருட்களையே நோக்கிய வண்ணம் இருந்தன. தான் போகும் வழியில் தன் கருத்தைக் கவரக்கூடிய பொருளெதையும் கண்டிலன். அதனால் கண்ணுக்குப் புலப்படுபவற்றுள் தன் எண்ணத்தை இழுக்கக்கூடியவை எவையேனும் எதிர்ப்பட்டாலோ என அவாவிய உள்ளத்தனாய் நடந்தனன். ஆனால் அப்படியானவை எவையும் அவன் கண்களுக்கு எதிர்ப்பட்டில. இறுதியில் தனக்கெதிரே வண்டியொன்று வெகுதூரத்தில் மெல்ல மெல்ல நகர்ந்துவருவதைக் கண்டான்.

அவ்வண்டியின் மருங்கே உழவனொருவன் நடந்து வந்தனன். தன்னருகே வண்டி வந்ததும் வழிப்போக்கன் உழவனைப் பார்த்து, "ஓய் பெரியவரே! இதுதானே பூஞ்சோலைக்குப் போகும் வழி?" என்று வினவினான். உடனே அவ்வுழவன் தன் தோளிலிருந்த சால்வையை நெகிழ்த்து, "ஓம் ஐயா, இதுதான்; நேரேபோனால் அங்கே கொண்டுபோய்விடும்" என்று பணிவோடு விடை பகர்ந்தான்.

"இன்னும் நெடுந்தூரம் போகவேண்டுமோ?"

"இல்லை, இல்லை. அவ்வூருக்குக்கிட்ட வந்துவிட்டீர்கள். உங்கள் வாயிலிருக்கும் வெண்சுருட்டுப் புகைத்து முடிவதற்குள் நீங்கள் அங்கிருக்கும் ஏரியை அடைந்து விடுவீர்கள்."

"தோட்ட முதலாளியாரின் வீடு ஏரிக்கு எவ் விடத்து?"

"பக்கத்திலேதான்".

இவ்வாறு கூறியபின் உழவன் வண்டியோடு தன் வழியே சென்றனன். நெடுந்தூரம் நடந்தமையால் களைப் புற்றிருந்த வழிப்போக்கனும் அவன் பேச்சைக் கேட்டு ஊக்கம் மிகுந்த உள்ளத்தனாய் மரங்களினூடாகக் கடுகி நடந்தனன். நேரே எதிராய் அப்பச்சிலை மரங்களின் நடுவேயுள்ள பழமரத்தோப்பில் அழகிய வெண்பட்டாடை காற்றில் மிதப்பது போன்ற தோற்றத்துடன் ஆங்குள்ள மரங்கள் கொத்துக் கொத்தாய்ப் பூத்துக் குலுங்கின. இதனருகே அவ்வேரியின் கரையில் தோட்ட முதலாளியாரின் பேரில்லம் வெண்ணிறச் சுவருடனும் செந்நிற ஓடு வேய்ந்த கூரையுடனும் தூக்கி நின்றது. பெருங்குருகொன்று அவ்வீட்டின் முகட்டினின்று கிளம்பிப் பறந்து ஏரியின்மீது சுழன்று சுழன்று வட்டமிட்டுத் திரிந்தது.

இக்காட்சியைக் கண்டதும் வழிப்போக்கன், "அதோ பூஞ்சோலை!" என்று வியப்புடன் மொழிந்தான். தான் கருதிவந்த பயணம் முடிவடைந்துவிட்டதுபோல் அவன் மனதுக்கு அப்பொழுது தோற்றியது. தன் காலின்கீழ் அமைந்திருந்த மரவுச்சிகளினூடாக ஏரியின் அக்கரையில் தோன்றியவற்றின் வனப்பைத் தன் கண்களால் பருகியவண்ணம் சிறிது நேரம் அசையாது நின்றனன். ஆண்டு அப்பேரில்லத்தின் எதிர்ச்சாயல் நீரின் மடியில் மிதந்து மெல்ல மெல்ல ஆடிக்கொண்டிருந்தது. இக் காட்சியைப் பார்த்துக்கொண்டு நின்றவன் திடீரெனத் திரும்பவும் நடக்கலானான்.

அவன் சென்ற தெரு இப்பொழுது மலைச்சாரல் வழியே செங்குத்தாக இறங்கியது; அதனால் இதுகாறும் அவன் அடியின்கீழ் அடங்கி நின்ற மரங்கள்

மேலோங்கித் தலை நிமிர்ந்து அவனுக்கு நிழலைக் கொடுத்தன; ஆயினும் அவை ஏரியின் காட்சிகள் அவன் கண்ணுக்குப்புலனாகாது தடுத்தன; எனினும் அவ்வழகிய காட்சிகள் மரக் கிளைகளிடையே அமைந்த வெளிகளினூடாக அவனை எட்டிப்பார்ப்பனபோன்று ஆங்காங்கு தென்பட்டன.

மீண்டும் அத்தெரு மேல்நோக்கிச் செல்லலாயிற்று; இடப்புறத்தும் வலப்புறத்தும் ஓங்கி நின்ற காட்டு மர நிரைகள் முடிவடைந்தன; வழிநீளம் செடிகொடிகள் அடர்ந்து படர்ந்து மூடியிருந்த சிறு குன்றுகள் காட்சி அளித்தன. தெருவோரத்தே இருமருங்கிலும் பூத்துக் குலுங்கிய பழமரங்கள் தோன்றின. இன்னிசை முரலும் வண்டுகள் அவற்றிலுள்ள மலர்களின் தீஞ் சுவைத் தேறலைப் பருகும் பெருவிருப்போடு அம்மலர் களுட் புகுந்து ஆராய்ந்தன. சற்றுத் தூரத்தே அவ் வழியின் பக்கமாக நீலநிறமுள்ள மேற்சட்டையணிந்த வனும் நெடிய தோற்றமுடையவனுமான ஆடவ னொருவன் நின்றான். நின்றவன் ஆங்கு செல்லும் வழிப்போக்கனைக் கண்டு அவனை வரவேற்க முன்வந் தான். வந்து அவனைக் கூர்ந்து நோக்கி, "யாரிது சுந்தரமோ, வா வா" எனக் கூறிவிட்டு மிகுந்த உவகை யோடு, "நண்பா! இதுதான் எனது பூஞ்சோலைத் தோட்டம். வா, வீட்டுக்குப்போவோம்" என்று அவனை வரவழைத்தான்.

"சாம்பு, உனக்குக் கடவுள் மேலும் மேலும் அருள் புரிவாராக. நீ என்னை வரவேற்றதற்காக உனக்கு எனது மனமார்ந்த நன்றி," என்று அழகசுந்தரன் தன் பழைய பள்ளி நண்பனாகிய சாம்பசிவத்துக்குப்

பதிலளித்தான். அப்பொழுது சாம்பசிவத்தின் கண்களுக்கு அழகசுந்தரன் முகம் சிறிது வாடியிருப்பது போலக் காணப்பட்டது. அதனால் அவன் அழகசுந்தரனை நோக்கி, "என்ன சுந்தரம்! நீ இப்பொழுது என்னமாதிரி மாறிவிட்டாய்! எப்பொழுதும் மலர்ச்சி ததும்பிக்கொண்டிருக்கும் உன்முகம் இப்பொழுது மிக வாட்டமுற்றதாய்க் காணப்படுகின்றதே!" என்று கூறினான்.

"ஓகோ, அப்படியோ? அது கிடக்கட்டும். ஆனால் உன்னைப் பார்த்தால் நீ முன்னிலும் மிகுந்த களிப்புள்ளவனாய்க் காணப்படுகின்றாயே" என அழகசுந்தரன் பதிலிறுத்தான்.

இம்மொழியைக் கேட்டதும் மட்டான தோற்றமுள்ள சாம்பசிவத்தினது முகத்தில் முன்னரிலும் மிகுந்த உவகை திகழ்ந்தது.

"நீ சொல்வது சரிதான், சுந்தரம்; இப்பொழுது நான் அந்த நாளையில் நீ கண்ட சாம்பசிவ மல்லன். அந்த மதிக்க முடியாத மாணிக்கத்தைப் பெற்ற பின்னர் வேறு ஆளாக மாறிவிட்டேன். ஏன்? அந்தச் செய்தி உனக்குத் தெரியுந்தானே".

இங்ஙனம் கூறியதும் அவன் தன் இருகைகளையும் ஒன்றோடொன்று உரோஞ்சிப் பிசைந்துகொண்டு களிப்படைந்த உள்ளத்தனாய், "நீ இங்கு வருவதைப் பற்றி அவளுக்குக் கொஞ்சமும் இப்பொழுது தெரியாது. உன்னைக்காண அவளுக்குப் பெரிய வியப்பாயிருக்கும்," என்றான்.

"வியப்பா! யாருக்கு?" என்று அழகசுந்தரன் அவனைக் கேட்டான்.

"ஏன், கமலாவுக்குத்தான்."

'கமலாவுக்கோ? அப்படியானால் நான் இங்கு வருவதைப்பற்றி அவளுக்கு நீ ஒன்றுஞ் சொல்லவில்லையோ?"

" இல்லை, இல்லை. ஒன்றுமே சொல்லவில்லை. உன்னைப்பற்றிய நினைப்பு அவளுக்கு எள்ளளவேனும் இல்லை. அவள் தாய்க்கும் அப்படித்தான். இரண்டு பேருக்கும் தெரியாமல் நானாகவே உன்னை வரவழைத்தேன். காத்திராத வண்ணம் உன்னைக் கண்டால் அவர்களுக்கு மிகுந்த மகிழ்ச்சி உண்டாகுமல்லவா? நான் எப்பொழுதும் இப்படிப்பட்ட சிறு சிறு புரளிவேலைகள் செய்வதில் வல்லவனென்பது உனக்குத் தெரியுந்தானே".

இச்சொற்களைக் கேட்டதும் அழகசுந்தரன் உள்ளத்தில் பலவகையான எண்ணங்கள் எழத்தொடங்கின. வீடு நெருங்க நெருங்கத் தன் மூச்சுக்கூடத் திணறும் போல் அவனுக்குத் தோன்றிற்று.

அப்பொழுது தெருவின் இடப்பக்கத்தே இருந்த தோட்டங்கள் கழிந்துவிட்டன. இருவரும் சாம்பசிவத்தினுடைய வளவின் வாயிலை அடைந்தனர். அவ்வாயிலிலிருந்து வீட்டுக்குச் செல்லும் வழியோரமாகச் செடிகொடிகள் பயிரிடப்பட்டிருந்தன. அங்கிருந்து ஏரிக்கரைவரையும் அவை அடர்ந்து வளர்ந்து படர்ந்திருந்தன. இச்செடிகொடித் தோட்டத்துக்கருகிலேயே அவ்வீட்டு அடுக்களை இருந்தது. அப்பொழுது

வானில் வட்டமிட்டுத் திரிந்த பெருங்குருகு கீழிறங்கிச் செடிகொடிப் பாத்திகளினிடையே பெருமிதத்தோடு நடந்து அங்குள்ள பயிர்களைக் கொத்திக் கொத்தி அருந்தியது. இதனைக் கண்ணுற்ற சாம்பசிவம் தன் கைகளைக் கொட்டி அதனை நோக்கி, "என்ன, ஏ நெடுங் காலா, என் பயற்றங்காய்களைத் திருட நீ மறுபடியும் வந்து விட்டாயா? சரி, ஒரு நாளைக்கு உனக்குச் செய் கிறேன் வேலை, பார்" என்று உரப்பிக் கூறினான். அப் பொழுது பெருங்குருகு மெல்லென எழுந்து அடுக்களைத் தோட்டத்தருகிலிருந்த புதுக்கட்டிட மொன்றின் கூரையின்மேல் போய் இருந்தது. அக்கட்டிடத்தின் சுவரோரமாய் மாதுளை, எலுமிச்சை, தோடை, கமுகு, வாழை முதலிய மரங்கள் செறிந்திருந்தன.

அப்பொழுது சாம்பசிவம் அக்கட்டிடத்தை அழக சுந்தரனுக்குக் காட்டி "இது ஒரு புதுக்கட்டிடம்; இதை இரண்டு ஆண்டுகளுக்கு முன் நானே கட்டி எழுப் பினேன். காலஞ்சென்ற என் தகப்பனார் இந்தத் தோட்டத்திலுள்ள கட்டிடங்களைப் புதுக்கி அமைத் தார். ஆனால் நாங்கள் குடியிருக்கும் இந்த வீடு என் பாட்டனார் கட்டியது. பழையனவற்றோடு நில்லாது நாமும் புதியன புதியனவாக எம்மாலியன்றவற்றைச் செய்யவேண்டியது முறைதானே," என்று சாம்பசிவம் பெருமையோடு கூறினான்.

இவ்வாறு இருவரும் பேசிக்கொண்டு வருகையில் அத்தோட்டத்தினுள் நாள் முழுவதும் வெய்யிலினின்று வேலை செய்தமையால் கருகி இளைப்படைந்த தோற்றத் துடன் வீடுகளுக்கேகும் தொழிலாளர் பலர் சாம்ப சிவத்தைக் கண்டுவிட்டுத் தங்கள் சால்வைகளை எடுத்துக்

கக்கத்தில் வைத்துக்கொண்டு தாழ்மையாய் ஒதுங்கி நின்றனர். அவரைக் கண்டதும் சாம்பசிவம் தான் முதலாளி என்ற முறையில் அவரை நோக்கி, "என்ன, இன்று நீங்கள் தோட்டத்தில் என்னென்ன வேலை செய் தீர்கள்? நேற்று நான் காட்டிய மரம் இரண்டையும் தறித்து வீழ்த்திவிட்டீர்களோ?" என்று தோட்டத்தில் நிகழ்ந்த வேலைகளைக் குறித்து அவரிடம் வினவினன். வேலையாட்களுள் வயதில் முதிர்ந்த ஒருவன் அடக்க ஒடுக்கத்துடன் தாம் செய்த வேலைகளை விரித்துக் கூறினன். அதன்பின் அவர்களுக்குத் தத்தம் இல்லங்கட் கேகுமாறு விடையளித்துவிட்டுச் சாம்பசிவம் அழக சுந்தரனையும் கூட்டிக்கொண்டு வீட்டை நோக்கி நடந் தனன்.

இறுதியில் இருவரும் வீடுவந்து சேர்ந்தனர். சேர்ந் ததும் கதவைத் திறந்து மண்டபத்தை அடைந்தனர். எவரும் மண்டபத்தின் சாளரத்துக்கூடாக அவ்வீட்டுக் கணித்தாக உள்ள பூந்தோட்டத்தின் அழகினைக் கண்டு பருகலாம். அன்றியும் வீட்டுக்கருகே இருக்கும் ஏரியை யும் அங்கிருந்து பார்க்கலாம்.

அம்மண்டபத்தை நண்பரிருவரும் அடைந்த வுடனே ஓர் இன்னிளந்தென்றல் அருகிலுள்ள பூந் தோட்டத்தே மலர்ந்திருக்கும் பூக்களின் நறுமணத் தோடு வீசியது. அப்பொழுது பூந்தோட்டத்துக் கண்மையில் இருந்த ஒரு கதவருகில் இளம் வயதுடைய நங்கையொருத்தி ஒரு பெட்டியில் பழங்களடுக்கிக் கொண்டு அமர்ந்திருந்தாள். அவள் அங்கிருந்தவண்ணம் அவரிருவரும் மண்டபத்துள் வருவதைக் கண்டாள்;

உடனே எழுந்து அவரை வரவேற்க முன்வந்தனள். அவ்வாறு வரும்பொழுது அங்கு புதியவனுய் வந்தவனைக் கண்டதும் திகைப்புற்று அடியெடுக்கமாட்டாது மரம் போல அசைவற்று நின்றனள். ஆனல் அவனே அவளைப் பார்த்து அன்போடு புன்னகை புரிந்தான்.

அப்பொழுது அவள், "என்ன இது! வியப்பாயிருக்கின்றதே. உண்மையில் நீதானு? நாம் இருவரும் ஒருவரை ஒருவர் கண்டு எவ்வளவு காலம்!" என்ருள்.

"ஓம், நெடுங்காலந்தான்" என்று கூறினுன் அழகசுந்தரன். அவ்வளவுதான், அதன்பின் அவனுல் ஒன்றும் பேசமுடியவில்லை. அவள் பேச்சு அவன் நெஞ்சை ஊடுருவிப் பாய்ந்து வருத்துவது போன்றிருந்தது. அவளைச் சிறிது உற்று நோக்கினன். பல ஆண்டுகளுக்கு முன்பு தான் பிறந்த ஊரினின்றும் பல்கலைக் கழகத்துக்குப் பிரிந்துபோன அன்று பிரியாவிடை அளித்த அந்த அழகு வாய்ந்த மெல்லிய உருவமே இன்றும் அவன் எதிரில் நின்றது.

சாம்பசிவம் கதவருகில் அவரிருவரையும் பார்த்த வண்ணம் நின்ருன். அவன் கண்களில் உவகை ததும்பி மிளிர்ந்தது.

"என்ன கமலா! இவரை இன்று காணக்கூடுமென்று நீ எள்ளளவேனும் எதிர்பார்த்திருக்கமாட்டாய். இல்லையே!"

அப்போது கமலநாயகி ஓர் உடன்பிறந்தாள் எவ்வாறு நோக்குவாளோ அவ்வாறே அவனைத் தன் கண்களால் நோக்கி, "என்மீது நீ எவ்வளவு உருக்கமாய் இருக்கின்ருய்" என்று மொழிந்தாள்.

உடனே அவன் அவள் கையைத் தனது கையினால் பரிவுடன் பற்றிப் பின்வருமாறு பகர்ந்தான்: "இவர் இன்றைக்கு எங்கள் வீட்டுக்கு வந்திருக்கிறார். விரைவிலே எங்களைவிட்டுப் போக முயலுவார். சில நாட்களுக்காவது ஒரே இடத்தில் அமைதியாக ஆறியிருக்கச் செய்யவேண்டும். இப்போது இவரைப் பார்க்கிறவர்கள் பிற நாட்டவர் என்றே சொல்லுவார்கள். என்ன மாதிரி மாறிவிட்டார். உடம்பும் நல்லாய் இளைத்து விட்டது. என்ன, நான் சொல்வது சரிதானே!"

அதைக்கேட்டுக் கமலநாயகி அழகசுந்தரனின் முகத்தைக் கூர்ந்து நோக்கி, "நாங்கள் நெடுங்காலமாக ஒருவரையொருவர் காணவில்லை. அதனாற்றான் இவ்வாறு தோன்றுகிறது போலும்" என்றாள்.

அவ்வேளை அவள் தாயார் கையில் ஒரு பெட்டியுடன் கதவுப்புறம் வந்தாள்; வந்தவள் அழகசுந்தரனைக் கண்டாள்; கண்ணுற்றதும், "யாரிது சுந்தரமோ? எப்போது வந்தாய், தம்பி? கண்டு நெடுங்காலமாகி விட்டது; மீண்டும் உன்னைக் காண எமக்கு மிகுந்த மகிழ்ச்சி உண்டாகிறது; வந்த நீ கொஞ்ச நாளைக்காவது தங்கி நின்று ஆறிப்போ" என்று கூறினாள்.

அதன்பின் அவரெல்லோரும் சிறிது நேரம் ஒருவரோடொருவர் அளவளாவிக்கொண்டிருந்தனர். பின்பு பெண்களிருவரும் அடுக்களையுட்சென்று அழகசுந்தரனுக்கெனச் சுவை மிக்க இனிய தின்பண்டங்களைப் புதியனவாய் ஆக்கினர். சற்று நேரத்துள் அவற்றை அவனுக்கு வழங்கினர். அவனும் மகிழ்வோடு அருந்தினான். சாம்பசிவம் தனது பெரிய சுங்கானைப் பற்றவைத்துக்கொண்டு

புகையை இழுத்திழுத்து அவனோடு உரையாடிக் கொண்டிருந்தான்.

"பிரிந்தவர் கூடினாற் பேசவும் வேண்டுமோ?" அன்று முழுவதும் பழங்கதை பேசுதலிலும் புதினம் விசாரித்தலிலும் இன்பமாய்க் கழிந்தது. அதன்பின் அழகசுந்தரன் வழி நடந்த களை தீர இளைப்பாறினான்.

அடுத்த நாள் சாம்பசிவம் அழகசுந்தரனைக் கூட்டிச் சென்று பூஞ்சோலையிலுள்ள தன்னுடைய வயல், தோட்டம் முதலிய யாவற்றையும் காட்டினன். அவன் தோட்டம் ஏரிக்கரையில் வளம் மிக்க நிலத்தில் அமைந்திருந்தது. ஆங்குள்ள பயிர் யாவும் செழித்தோங்கி வளர்ந்து சிறந்த பயனை அளித்தன. அங்கு வேலை செய்யும் மக்கள் யாவரும் நிறைவுள்ள உள்ளத்தோடும் உரம்பெற்ற உடலோடும் விளங்கினர். இவை யாவற்றையும் கண்ணுற்ற அழகசுந்தரன் "என் நண்பன் சாம்புவின் நல்வினைப்பயன் என்னே! என்னே!" என எண்ணி இறும்பூதெய்தினான்.

தோட்டத்துக்கு அருகிலே உள்ள மண்டபத்திலேயே அவ்வீட்டிலுள்ளார் உச்சிவேளை உணவை உண்பது வழக்கம். அங்கேயே விருந்தாளியாக வந்த அழகசுந்தரனுக்கும் உணவு அளித்தனர். சாம்பசிவமும் கமலநாயகியும் தத்தம் வேலைகளைப் பார்த்துவரும் நேரத்தைத் தவிர எஞ்சிய நேரம் முழுவதையும் அழகசுந்தரனுடனேயே கழித்துவந்தனர். இரா உணவுக்கு முன்னும் உச்சி உணவுக்கு முன்னும் ஒரு சிறிது நேரம் அவன் தனக்கென விடப்பட்ட அறையிலிருந்து தனது வேலையைச் செய்வன்.

பல ஆண்டுகளாக நாட்டுப் பொதுமக்கள் பாடும் பாட்டுக்களைக் கிடைக்கும் போதெல்லாம் எழுதி வைத்துக்கொள்வது அவன் வழக்கம். அப்பாட்டுக்கள் மக்கள் வாழ்க்கையோடு ஒன்றுபட்டனவாய் அவர் உணர்ச்சி வேறுபாடுகளைக் கண்ணாடிபோற் காட்டிக் கொண்டிருப்பதை நன்கறிந்திருந்தான். அதனால் அவற்றையெல்லாம் தெரிந்தெடுத்துப் பகுதி பகுதியாய்த் தொகுத்து வந்தான். தான் போகும் இடங்கள் தோறும் புதியனவாய் அகப்படும் பாட்டுக்களையும் தனது தொகுதியிற் சேர்த்துக்கொள்ளுவான்.

கமலநாயகி பொதுவாய் அன்பும் அமைதியும் வாய்ந்தவள். அவள் செய்யும் வேலைகளுக்கெல்லாம் சாம்பசிவம் எப்பொழுதும் உதவி புரிந்துவருவன். அதற்காக அவன்மாட்டு அவள் நன்றியுடையவளாயிருந்தாள். அவள் இயல்பைக் கண்ணுற்ற அழகசுந்தரன் முன்னாளிலே மனக்களிப்பும் விளையாட்டுக் குணமும் பொருந்த விளங்கிய சிறுமி தான் எதிர்பார்த்ததற்கு மாறாக இப்பொழுது எவ்வளவு அடக்கம் பொருந்திய பெண்ணாக மாறிவிட்டனள் என்று வியப்புற்றான்.

அடுத்த நாட்டொடக்கம் பின்னேரங்களில் அவன் ஏரிக்கரையோரம் உலாவப்போய்வருவன்.

ஏரிக்கரையை அடையவேண்டுமாயின் வீட்டுக்கருகேயிருக்கும் தோப்பினூடாகப் போகும் தெருவழியே செல்லுதல் வேண்டும். அத்தோப்பின் முடிவில் ஏரியினணை மேடாக உயர்ந்திருந்தது. அம்மேட்டில் உயர்ந்தோங்கி நிற்கும் மரங்களின் நடுவே மேற்கு

நோக்கியவண்ணம் ஒரு சாய்மான இருக்கை இருந்தது. மாலை வேளையில் எவரும் அதில் அமர்ந்திருந்து பகலவன் கதிர்கள் குடபால் மறையும் காட்சிகளைக் கண்டு களிப் பெய்தலாம்.

ஒருநாட் பின்னேரம் அத்தெருவழியே அழக சுந்தரன் வழக்கம்போல் உலாவப் போய்த் திரும்பி வந்தான். இடைவழியில் மழை தூறத்தொடங்கியது. இத்தூற்றல் என்ன செய்யுமென எண்ணி அதைப் பொருட்படுத்தாது அவன் தொடர்ந்து நடந்தான். தூற்றலாகத் தொடங்கிய மழை சற்று நேரத்திற்குள் கொட்டத்தொடங்கியது. அப்பெருமழைக்கு அஞ்சிய அழகசுந்தரன் அது சில விநாடி நேரத்தில் நின்றுவிடும் என எண்ணியவனாய், பாதையோரத்தில் நின்ற ஒரு மரத்தடியில் ஒதுங்கி நின்றான். மழையோ ஓய்ந்த பாடில்லை. சோனாமாரியாய்ப் பெய்தது. அதனால் நனைந்து விட்டான். அற நனைந்தமையால் மேலும் அங்கு நிற்பதில் பயனில்லை என்றெண்ணி வீடு நோக்கி நடக்கலானான்.

பொழுது இருட்டிக்கொண்டு வந்தது. மழையோ முன்னரிலும் உரத்துப் பொழியலாயிற்று. அழக சுந்தரன் சாய்மான இருக்கை இருந்த இடத்திற்கு அருகே வந்தான். அப்பொழுது வெள்ளை உடையணிந்த பெண்ணொருத்தி அண்மையிலுள்ள மரங்களின் கீழ் நிற்பதுபோல் அவன் கண்ணுக்குத் தோன்றியது. அவன் மேலும் உற்றுநோக்கியபோது அவள் தன்னையே பார்த்துக்கொண்டு அசைவற்று நிற்பதுபோல் அவனுக் குப் புலப்பட்டது.

அங்கு நிற்பது கமலநாயகியே என்று அவன் எண்ணினுன். அதனுல் அவளோடு கூடி வீட்டுக்குச் செல்லலாமென்று உள்ளியவனுய் அவள் நிற்கும் இடத்தை நோக்கிச் சென்றனன். ஆனுல் அவ்வுருவோ மறுபுறம் திருப்பி மெல்ல நழுவி அங்கிருக்கும் இருளடைந்த குறுக்கு வழியொன்றுல் விரைந்து சென்று மறைந்தது.

அங்கு நின்றது கமலநாயகியாயின் அவள் ஏன் அவ்வாறு செய்தாளென்று அவனுக்கு விளங்கவில்லை. அதனை நினைக்குந்தோறும் அவன் மனம் ஆழ்ந்த சிந்தனைக்குள்ளாயிற்று. அதனுல், இதுவரை விரைந்து சென்ற அழகசுந்தரன் கொட்டும் மழையையும் பொருட்படுத்தாது சிந்தனைச் சுழலிற் சிக்குண்டவனுய் வீட்டை நோக்கி மெல்ல மெல்ல நடக்கலானுன். அங்ஙனம் நடந்து செல்லுகையில், வீடு சேர்ந்தவுடன் தான் கண்டதைப் பற்றிக் கமலநாயகியிடம் கேட்கலாமோ என எண்ணினன். ஆனுல் அதைப் பற்றி அவளை வினவுதற்கு அவன் மனதிற் போதிய துணிவு எழவில்லை.

வீட்டை அடைந்து மண்டபத்தினுள் நுழைந்ததும் அதன் அருகேயுள்ள தோட்டத்துக் கதவைத் திறந்து கமலநாயகி வழக்கமான இடத்தில் இருக்கின்றனளோ எனப் பார்க்கலாமோ என ஒருகால் உள்ளினன். ஆனுல் பழைய நினவுகள் எழவே நாணம் மீதூர, அவள் எங்கே தன்னைக் கண்டுவிடுவாளோ என்று பயந்து தோட்டப் புறத்திலிருக்கும் கதவண்டை அவன் எட்டியும் பார்க்கவில்லை. நேரே விரைந்து தன் அறையினுட் சென்று கதவைச் சடாரென அடைத்துத் தாழிட்டான்.

---

# அன்னை எனக்கிட்ட ஆணையதால்

நாட்கள் சில கழிந்தன. ஒருநாள் மாலைவேளை, அவ்வீட்டிலுள்ளோர் யாவரும் தோட்டத்தருகில் இருக்கும் மண்டபத்தில் வழக்கம்போல் அமர்ந்திருந்தனர். கதவுகள் திறந்தவண்ணம் இருந்தன. ஏரியின் அக்கரையில் இருக்கும் காட்டுக்குள் ஞாயிறு மறைந்துகொண்டு போயது.

அன்று நண்பனொருவன் அழகசுந்தரனுக்கு நாட்டுப் பாடல் சிலவற்றை எழுதி அனுப்பியிருந்தான். அம்மண்டபத்தில் அவனோடமர்ந்திருந்த யாவரும் அப்பாடல்களைத் தமக்குப் பாடிக்காட்டுமாறு அவனை வேண்டினர். உடனே அவன் தனது அறைக்குட்போய் ஒரு கடதாசிச் சுருளை எடுத்துவந்தான். அச்சுருளில் உள்ள இதழ்களில் பாட்டுக்கள் அழகாய்ப் பொறிக்கப் பட்டிருந்தன.

யாவரும் அங்குள்ள மேசைக்கருகில் அமர்ந்தனர். கமலநாயகி அழகசுந்தரனுக்கு அடுக்க இருந்தாள், அப்பொழுது அழகசுந்தரன் அங்குள்ளோரைப் பார்த்து, "இப்பாட்டுக்கள் முழுவதையும் நான் இன்னும் படித்துப் பார்க்கவில்லை. ஆகையால் அவற்றுள் சிலவற்றை அங்குமிங்குமாக வாசிப்போம்" என்றனன்.

அக்கடதாசிச் சுருளைக் கமலநாயகி எடுத்து விரித்துக் கொஞ்சநேரம் பார்த்துவிட்டு, "இங்கு இருப்பன அருமையான பாட்டுக்கள். இவற்றை எமக்குப் பாடிக் காட்டுங்கள்" என்று அழகசுந்தரனை வேண்டினள்.

அவன் அதற்கியைந்து தொடக்கத்திற் சில பாட்டுக்களை வாசித்தனன். வாசிக்கும்பொழுது அழகானவை என்று தான் கண்டவற்றை இசையுடன் பாடினான். அப்பாட்டுக்களைக் கேட்டதும் அங்கிருந்தோர் மிகுந்த மகிழ்வெய்தினர். கமலநாடகி, "இவ்வளவு அழகிய பாட்டுக்களை எல்லாம் ஆக்கினவர் யார்?" என்று வினவினாள்.

அப்பொழுது சாம்பசிவம், "இவையெல்லாம் நாட்டுப்புறத்திலே வாழும் கீழ்மக்கள் களியாட்டுநேரங் களிற் பாடும் குப்பைகூளங்களென்று கேட்டவுடனேயே சொல்லிவிடலாமே" என்றான்.

அதற்கு அழகசுந்தரன் கூறுவன்: "அப்படிச் சொல்லாதீர்கள். அவற்றை யாரும் ஆக்கவில்லை. அவை தாமாகவே எழுந்தவை. வானத்திருந்து வீழ்ந்தவை. சிலம்பியின் அறுந்த வலைபோல அவை நாட்டுப்புறங் களில் காற்றிலே அங்குமிங்கும் மிதந்து திரிகின்றவை. பல்லாயிரக்கணக்கான ஊர்கள்தோறும் வாழும் பன்னூறாயிரக்கணக்கான மக்கள் மனதிற் சிக்குண்டு அங்கிருந்து தாமாகவே ஊற்றெடுத்து வெளிப் பாய்கின்றவை; அவ்வண்ணம் பாயும்போது மக்கள் உணர்ச்சிமேலீட்டினால் அவற்றைப் பாடித் தம்மையும் மறந்து இன்புறுகின்றனர். வாழ்க்கையில் தாம் செய்யும் வேலைகளினாலுண்டாகும் களைப்பை ஆற்றுதற்கும், இன்புறும் நேரங்களில் தம் இன்பத்தைப் பெருக்குதற்கும், துன்புறும் நேரங்களில் அத்துன்பத்தை வெளியிடுதற்கும், போர் புரியும்போது வீரத்தை ஊட்டுதற்கும், பச்சிளங் குழந்தைகளைத் தாலாட்டிக் கண்துயில வைப்பதற்கும், நகை இளிவரல் ஆகிய மெய்ப்பாடுகளைப்

பெருக்கிப் புலப்படுத்துதற்கும், நம் நாட்டு ஆடவரும் மகளிரும் அவற்றை ஏற்ற இசையுடன் பாடிப் பெரும் பயனடைகின்றனர். நீங்கள் எப்பொழுதாவது நாட்டுப் புறங்களுக்குச் சென்றிருக்கிறீர்களோ? உழவர்கள் தோட்டங்களுக்குத் தண்ணீர் இறைக்கும்போது பாடுவதைக் கேட்கவில்லையோ? அவர்கள் வயல்களில் அரிவி வெட்டும்போதும், சூடு மிதிக்கும்போதும், என்னென்ன அருமையான பாடல்களை எல்லாம் பாடித் தம்மை மறந்து தம் வேலைக்களைப்பினையும் மறந்து இன்பத் திலேயே சொக்கிப் போயிருக்கின்றனர். ஒன்றுமறியாப் பாலர்கூட இப்பாடல்களின் இன்பத்திலீடுபட்டு உறங்கு வதை நீங்கள் காணவில்லையோ? ஆருயிர்க் கணவரை யும், அரும்பெறன் மைந்தரையும், அன்புமிக்க அன்னை தந்தையரையும், பறிகொடுத்து ஆற்றொணுத் துயரில் ஆழ்ந்து நையும் மகளிர் அவலச்சுவை மிக்க இப்பாடல் களின் மூலம் தம் துன்ப உணர்ச்சிகளை வெளியிட்டுத் தம் துயரை மாற்றுவதை நீங்கள் கண்டதில்லையோ? சுருங்கக் கூறின், வாழ்க்கையில் எமது உள்ளத்தில் ஏற்படும் கிளர்ச்சிகளும் துயர்களும் மறக்கமுடியாத வகையில் அழுத்தந்திருத்தமாகப் பொறிக்கப்பட்டிருப் பதை நாம் காண்கிறோம். இவை நாம் எல்லோருமே ஒருங்கு சேர்ந்து ஆக்கியவை போல்வன.”

இவ்வாறு உணர்ச்சிப் பெருக்கோடு கூறிவிட்டுப் பின்பும் ஒரு இதழை எடுத்து அதில் எழுதிய பாட்டைப் படித்தனன். அப்பொழுது கமலநாயகி, “இந்தப் பாட்டு எனக்குந் தெரியும்; இதனை ஒரு முறை பாடுங்கள்; உங்களோடு கூட நானும் பாடுவேன்” என்ருள்.

அப்பாட்டை இருவருஞ் சேர்ந்து பாடினர்; அதன் பொருளும் பொருளுக்குத் தகுந்த இசையும் கேட்டிருந்தோருள்ளத்தைக் கொள்ளை கொண்டன. அப்படிப்பட்ட இனிய கருத்தும் இசையும் மாந்தர் உள்ளத்தில் எவ்வாறு அமைந்து சொல்லுருவாகிப் பாட்டாய் வெளிப்பட்டனவென்பது பெரிதும் வியக்கத்தக்கது.

அவளன்னை நாற்காலியிலமர்ந்து தைத்துக்கொண்டிருந்தபடியே அவற்றைக் கேட்டுக்கொண்டிருந்தனள். சாம்பசிவம் தன் இருகைகளையும் ஒன்றுசேர்த்து நாடியில் வைத்துக்கொண்டு நாற்காலியில் இருந்த வண்ணம் அப்பாட்டினைக் கூர்ந்து கேட்டான். பாட்டு முடிந்ததும் அழகசுந்தரன் அது எழுதியிருந்த இதழை ஒருபக்கத்தே வைத்தான். அப்பொழுது அமைதி நிலவியது.

எங்கணும் ஒலி அடங்கிய அம்மாலைவேளையில் மாடுகளின் கழுத்திற் கட்டிய மணிகளின் ஓசை ஏரியின் கரையோரத்திலிருந்து மெல்ல மெல்ல வந்து அவர் காதில் விழுந்தது. அதனையடுத்து ஒரு பாட்டிேனசையும் சிறிது சிறிதாய்த் தென்றலில் மிதந்து வந்தது. அதில் எடுத்தியம்பமுடியாத இனிமை செறிந்திருந்தமையால் எல்லோரும் அதனை உற்றுக்கேட்டனர். அழகசுந்தரனே மிகுந்த ஆவலுடன் நெற்றியைச் சுருக்கிக் கண்ணை மூடிக்கொண்டு அவ்விசையின் வண்ணத்தை அறியும்பொருட்டுக் கூர்ந்து கேட்டனன். அவன் முகத்தோற்றத்தை நோக்கிய கமலநாயகி, "இவ்வோசை காட்டில் மாடுகளை மேய்த்துவிட்டு, அதோ தெரியும் ஏரிக்கரையோரமாக அவற்றைக் கொண்டுசெல்லும் இடைச்சிறுவன் பாடிக்கொண்டுபோகும் ஓசை. இன்னும்

சற்று நேரத்தில் அவன் எமது வீட்டுப்பக்கமாகப் போவான். அப்பொழுது அவன் மணிபோன்ற இனிய குரலோசையினையும், கேட்போரை மயக்கும் வண்ணத்தினையும், செவிகளாற் பருகி இன்புறலாம். அவன் இசையின் ஒழுக்கினை உணர்ந்தவையேபோன்று அதற் கேற்றவாறு அவன் மாடுகளும் அடியெடுத்துவைக்கும்; அதனால் 'கணீர் கணீர்' என்று அறைந்து செல்லும் அம் மந்தையின் மணியோசை அவன் பாட்டிற்குத் தாளம் போன்றமைந்து உளத்திற்கு உவகையூட்டும்'' என நவின்ருள். இங்ஙனம் அவர் பேசிக்கொண்டிருக்கும் போதே இடைச் சிறுவன் பாட்டும் வண்ணமும் சிறிது சிறிதாகத் தெளிவு பெற்று அவர் காதில் வீழ்ந்தன. அங்கிருந்தோர் யாவரும் அவ்வினிய இசையில் மயங்கித் திளைத்துக் கிடந்தனர்.

அவ்விசையைக்கேட்ட அழகசுந்தரன் இளநகை அரும்பினன். "இப்படியே இப்பாட்டும் இசையும் ஒரு வகையான மாற்றமுமின்றி ஒருவரிடத்திலிருந்து இன்னொருவருக்குச் சென்று பரம்பரை பரம்பரையாகப் பரவி வருகின்றன'' என்ருன்.

அதைக்கேட்டதும் கமலநாயகி "இந்தப் பாட்டை இப்பகுதிகளிலுள்ள இடையர் பலரும் பலமுறையும் பாடக் கேட்டிருக்கின்ருேம்'' என்ருள்.

பின்னும் சிறிது நேரம் எல்லோரும் அப்பாட்டைக் கேட்டுக் கொண்டிருந்தனர். அதன் இசையும் மணிகளின் ஒலியும் மெல்ல மெல்ல அடங்கின. அப்பொழுது அழகசுந்தரன் கூறுவன்: "இவ்வகையான பாட்டும் வண்ணமும் உலகந்தோன்றிய காலத்திருந்தே யெழுந்தவை. அடவியின் அடியில் அவை தூங்குகின்றன.

அவற்றை முதலிற் கண்டோர் யாவரென அறிதல் முடியாததொன்று.

அதன்பின் வேற்றூர் இதழை எடுத்தான். அப்பொழுது மெல்ல மெல்ல இருளத்தொடங்கியது. மாலை வேளையில் மிளிரும் செவ்வொளி ஏரிக்கு அப்பா லுள்ள அடர்ந்த காட்டு மரங்களின்மீது நீர்நுரைபோற் படர்ந்திருந்திருந்தது. அழகசுந்தரன் இதழை விரித் தான். அதன் ஒரு பக்கத்தைக் கமலநாயகி பிடித்தாள். பல்லியொன்று சொல்லிற்று. அழகசுந்தரன் படிக்க லானான்.

1. அன்னை யெனக்கிட்ட ஆணையதாற் பிறனொருவன்
மன்னு மனையாளாய் மருவினன்யான் நெஞ்சே
மன்னு மனையாளாய் மருவியயான் நின்றிடினும்
பின்னி யுளமதனைப் பிணித்தான் ஒருவன்காண்
பின்னி யுளமதனைப் பிணித்தபெருங் காதலனை
இன்னே மறக்கவழி இயம்பிடுவாய் நெஞ்சே.

2. உள்ளம் மிகவெதும்பி உருவிழந்து வாய்புலம்பத்
தள்ளிப் பிறன்கையில் தவிக்கவிட்டாள் அன்னை
தள்ளிப் பிறன்கையில் தவிக்கவிட்ட நாள்முதலாய்
உள்ளும் பெருமிதமோ ஒன்றுமிலை யென்றனக்கே
உள்ளும் பெருமிதந்தான் ஒருவிநிற்கக் கீழ்மையதை
அள்ளி நனியிறைத்தாள் அருமைமிக்க அன்னை.

3. ஆணை அவள்தந்தாள் அயலவனை மணந்துவிட்டேன்
கோணி எனதுமனம் குவிந்துநிற்கும் துயர்த்தடத்தில்
கோணித் துயர்த்தடத்தில் குவிந்துமிக நிற்றலினால்
நாணி நிலைமையிதை நானகற்ற என்செய்வல்
நாணி நிலைமையிதை நானகற்ற ஓடெடுத்துப்
பேணித் துனியோடு பிறநாட்டில் அலைதல்நன்றே.

இப் பாட்டினைப் படித்துக்கொண்டிருக்கும்பொழுது கடதாசி மெல்லெலன நடுங்கியது. அதை அழகசுந்தரன்

உணர்ந்தான். படித்து முடித்ததும் கமலநாயகி தான் இருந்த நாற்காலியை மெல்லெனப் பின்னுக்குத் தள்ளினாள்; ஒன்றும் பேசாது எழுந்தாள்; தோட்டத்துட் சென்றாள். அதனைக் கண்டதும் அவள் தாய் எழுந்து அழகசுந்தரனை வெறித்துப் பார்த்தாள். பார்த்துவிட்டுப் பல்லைக் கடித்துக்கொண்டு மகளைப் பின்தொடர்ந்தாள். சாம்பசிவமும் அவர்களுக்குப் பின்னே செல்ல உன்னினன். அதைக்கண்ட கண்ணகை யார், "கமலா வெளியிலே ஏதோ அலுவலாகப் போயிருக்கிறாள்; நீங்கள் இங்கேயே இருங்கள்" என்று கூறிவிட்டு வெளியே சென்றாள். சாம்பசிவம் அங்கேயே இருந்தான்.

வெளியிலே இருள் தோட்டங்களிலும் ஏரியிலும் சிறிது சிறிதாய்ச் செறியத்தொடங்கியது. திறந்திருந்த கதவுகளினருகே சில வண்டுகள் 'விர்' என்று ஒலித்தன. வாசலினூடாக வருங் காற்றில் பூக்களின் நறுமணம் கமழ்ந்துகொண்டிருந்தது. ஏரிக்கரையிலே தவளைகள் இடும் பலவகை ஒலிகள் அங்கு வந்து பரவத் தொடங்கின. தன் துணையைப் பிரிந்த வானம்பாடிச் சேவலொன்று வீட்டின் சாளரத்துக்கருகே நிற்கும் மரத்திலிருந்து கூவியது. அதைக்கேட்ட அதன் பெடை தோட்டத்தின் நடுவே நின்ற மரமொன்றிலிருந்து எதிர் கூவியது. நிலாவும் தன் கதிர்களைப் பரப்பிக்கொண்டு மரங்களுக்குமேல் எழுந்துவிட்டது.

கமலநாயகியின் உருவம் தோட்டத்து வழியருகே நிற்கும் இலைகளடர்ந்த மரங்களுக்கிடையிற் சென்று மறைந்தது. அழகசுந்தரன் அவ்விடத்தைச் சிறிது நேரம் உற்று நோக்கினன். பின்பு தன் பாட்டுத்தாள்

களைச் சுருட்டினன்; எழுந்து வெளியேபோய் ஏரிக் கரையை அடைந்தான். சாம்பசிவம் சுங்கானைப் பற்ற வைத்துக் குடித்துக்கொண்டிருந்தான்.

அடவியில் அமைதி குடிகொண்டிருந்தது. அங்குள்ள மரங்களின் நிழல் ஏரியின் நீரினுள் வீழ்ந்து நெடுந்தூரம் சென்றிருந்தது. அவ்வேரியின் நடுவே வெண்ணிறத் திங்கள் பால் போன்றொளிரும் தன் கதிர்களைச் சொரிந்துகொண்டிருந்தது. இடையிடையே மரங்களுக்கூடாக மெல்லென்று ஓர் அசைவொலி கேட்டது. ஆனல் காற்றோ அங்கு வீசவில்லை. கோடைக்காலக் கங்குலின் உயிர்ப்பே அது. வேறொன்றுமன்று.

ஏரியின் கரையோரமாய் அழகசுந்தரன் நடந்து சென்றான். கரையில் நின்று கல்லெறியக்கூடிய தூரத்திலே நீரினுள் வெண்மையாய் இலங்கும் அல்லிமலரொன்று அவன் கண்களுக்குத் தோன்றியது.

அதன் அண்மையிற் சென்று அதனைப் பார்க்க வேண்டுமென்ற அவா அவனை உந்தியது. உடனே தான் அணிந்திருந்த ஆடைகளைக் களைந்து ஓரிடத்தில் வைத்துவிட்டு நீரினுள் இறங்கினன். அவ்விடமோ ஆழமற்றது. அவன் கால்கள் நீர்க்கொடிகளுட் சிக்குண்டன; கூரிய கற்கள் அவற்றை உறுத்தின; சிறிது எட்ட நடந்தான். எனினும் நீந்தக்கூடிய அளவு நீரை அடைந்திலன்.

இவ்வாறு நடந்துபோகும்போது சடுதியில் ஆழமான இடமொன்றில் அவன் அகப்பட்டான். நீர் குப்பென அவன் தலைக்குமேற் கிளம்பியது. அதற்குள் ஆழ்ந்தான். நீர் மட்டத்துக்கு மேலேவரச் சற்று நேரஞ் சென்றது.

தன் கால் கைகளை அடித்துக்கொண்டு சுழன்று சுழன்று வட்டமாய் நீந்தினன். தான் கரையில் எங்கிருந்து நீருள் இறங்கினனென அவன் இலகுவில் அறிந்து கொள்ள முடியாதவனுனன். நீரினுள் பளபளப்போடு ஒளிரும் இலைகளுக்கு நடுவில் அவ்வல்லிமலர் தனிமை யாய் நின்று விளங்குவதை மீண்டும் கண்டான்.

உடனே தன் கைகளை ஒன்றன்பின் ஒன்ருய் நீரின் மேல் உயர்த்தி உயர்த்தி அம்மலரை நோக்கி நீந்தினன். கைகளை வெளியே உயர்த்தும்போது நீர்த்துளிகள் நிலாக் கதிரின் ஒளியில் பளபளவென்று மின்னிய வண்ணம் முத்துக்கள் சொரிவதுபோல் வீழ்ந்தன.

நெடுந்தூரம் நீந்தியும் தனக்கும் அப்பூவுக்கும் இடையிலுள்ள தூரம் சிறிதேனும் குறையாமலிருப்பது போல் அவனுக்குத் தோற்றியது. திரும்பி ஏரியின் கரையைப் பார்த்தான். அதனைப் பனிப்புகார் மூடி விட்டது. எனினும் எடுத்த முயற்சியை விடுவதற்கு அவனுள்ளம் ஒருப்பட்டிலது. அதனல் அப்பூவை எப்படியும் அடைதல் வேண்டுமென்னும் மன உறுதி யோடு அதனை நோக்கிப் பின்னரும் நீந்திச் சென்ருன்.

சிறிது நேரத்தில் அப்பூ இருக்குமிடத்துக்கு அணித்தாய் வந்து விட்டான். அதன் இதழ்கள் வெண்மையாய்த் துலங்கிக் கொண்டிருந்தன. ஆனல் அவன் கால்கள் அங்கு வளர்ந்திருந்த கொடிகளுக்குள் சிக்கிக்கொண்டன.

அவ்விடத்தேயுள்ள நீர் கருமையாக இருந்தது. தனக்குப் பின்னே மீனென்று துள்ளிவிழும் ஒலி

அவனுக்குக் கேட்டது. அப்பொழுது அவன் மனதில் ஒரு வகையான பயங்கர உணர்ச்சி எழுந்தது. உடனே மூச்சை அடக்கியவண்ணம் தனது வலியெல்லாங் கூட்டி நீந்தித் தன் கால்களைச் சுற்றிப் பிடித்திருந்த கொடிகளை அறுத்துத் தன்னை விடுவித்துக்கொண்டு ஏரியின் கரையை அடைந்தான். அங்கு நின்றபடியே மீண்டும் அந்நீர்நிலையை உற்று நோக்கினன். அப்பொழுதும் கருநிறம் பாய்ந்த நீரின் நடுவில் மிகத் தூரத்தில் அந்த அல்லிமலர் தனிமையாய் மிதந்து நின்று இலங்கிக் கொண்டிருப்பதைக் கண்டான்; பெருமூச்செறிந்தான்.

பின்னர் தன் உடைகளை எடுத்து அணிந்துகொண்டு வீட்டை நோக்கி மெல்ல மெல்ல நடந்தனன். அருகாமையிலுள்ள தோப்பைக் கடந்து வீட்டு மண்டபத்துட் சென்றபோது சாம்பசிவமும் கண்ணகியாரும் மண்டபத்துள் நின்றனர். அவரிருவரும் அடுத்த நாள் ஒரு பயணம் போகவேண்டியிருந்தமையால் அதற்கு வேண்டிய முன்னேற்பாடுகளைச் செய்துகொண்டிருந்தனர்.

அழகசுந்தரனை மண்டபத்துட் கண்டதும் கண்ணகையார் அவனை நோக்கி, "இவ்விருட்டு வேளையில் இவ்வளவு நேரமும் எங்கு சென்றிருந்தாய்?" என வினவினள்.

அதற்கு அவன், "ஆர்? நானோ? அல்லிமலரைக் காணவேண்டிப் போனேன். ஆனல் காணமுடியவில்லை" என்று கூறினன்,

"நீங்கள் கூறுவது எனக்கு விளங்கவில்லை. அல்லிமலரை நீங்கள் ஏன் காணவேண்டும்? உங்களுக்கும்

அல்லிமலருக்கும் என்ன தொடர்பு?" என்று சாம்பசிவம் கேட்டான்.

உடனே அழகசுந்தரன், "ஒரு காலத்தில் நானும் அல்லியும் நட்பாயிருந்தோம். ஆனால் அது நெடுங் காலத்துக்குமுன்" என்றான்.

## கமலநாயகி

சாம்பசிவம் பூஞ்சோலையிலுள்ள தன் இல்லத்தின் பழமையையும் பெருமையையும் குறித்து மிகுந்த பெருமிதம் கொண்டிருந்தான். அவன் தன் இல்லத் திற்கு விருந்தினராக வரும் எவருக்கும் அதன் மாட்சி களை எடுத்துக் கூறுவதுண்டு; அத்துடன் ஏரிக்கரைக்கு அவரை இட்டுச்சென்று அதன் சுற்றுடலின் இயற்கை வனப்பைக் காட்டுவதுமுண்டு. அவ்வழக்கப்படியே தன்னுடைய உற்ற நண்பனாகிய அழகசுந்தரனையும் கூட்டிச்சென்று அங்குள்ள கண்கவர் தோற்றங்களை அவனுக்கும் காட்டவேண்டுமென்பது சாம்பசிவத்தின் பேரவா. ஆனால் எதிர்பாராதவண்ணம் தானும் தன் மாமியார் கண்ணகையாரும் அடுத்த நாள் வேற் றூருக்குப் பயணம்போகவேண்டியிருந்தமையால் அவன் கமலநாயகியை அழைத்து, "இயற்கையெழில் செறிந்த சூழலில் அமைந்திருக்கும் நம்மனை ஏரியின் அக்கரையி லிருந்து நோக்கினால் கண்கொள்ளாக் காட்சியளிக்கும். அதனை நீ ஒருமுறை சுந்தரத்திற்குக் காட்டிவிடு" எனக் கூறியிருந்தான். அவன் விருப்பினை நிறைவேற்றும் பொருட்டுக் கமலநாயகி அழகசுந்தரனையும் அழைத்துக் கொண்டு அவ்வேரியின் அக்கரைப்பக்கத்துக்கு உலாவப் போயினள். இருவரும் பக்கத்தேயுள்ள அடவியிலும்

நீரினுள் முனைந்திருந்த மணற்பரப்பிலும் நடந்து திரிந்தனர்.

இவ்வாறு சிறிது நேரம் உலாவிய பின் கமலநாயகி களைப்படைந்தனள். அதனால் அவள் ஒரு மரத்தின் தண்ணிழலில் அமர்ந்தனள். அமர்ந்ததும் அழகசுந்தரன் பக்கத்தே நின்ற பட்டமரமொன்றில் சாய்ந்தபடி நின்றான். அவ்வேளை அடவியின் அப்புறத்தே குயி லொன்று கூவியது. அதன் ஓசையைக் கேட்டதும் பழைய நினைவு அவன் மனதில் எழுந்தது. 'இது போன்று முன்பும் ஒருநாள் நிகழ்ந்ததல்லவோ?' என்று தனக்குள் எண்ணினன். உடனே அவன் கமல நாயகியைப் பார்த்துப் புன்முறுவல் பூத்தவனாய், "நாவற்பழம் பறிக்கப் போவோமோ?" என்றான்.

"இது நாவற்பழக்காலம் அல்லவே" என்றாள் அவள். "இல்லை, அது விரைவில் வந்துவிடும்" என்றான். அதைக் கேட்டுக் கமலநாயகி ஒன்றும்பேசாது தலையசைத் தாள். விறுக்கென எழுந்தாள். விரைந்து நடந்தாள். அழகசுந்தரனும் அவளைப் பின்தொடர்ந்தான். இரு வரும் ஆழ்ந்த எண்ணத்தில் அமிழ்ந்தியவராய் ஒருவரோ டொருவர் பேசாது சென்றனர்.

பின் சிறுசெடிகள் அடர்ந்திருக்கும் ஒரு வெளியை அடைந்தனர். அழகசுந்தரன் அங்கு ஓரிடத்தில் நின்று கீழே குனிந்து காலடியிற் கிடந்த சிறுசெடியொன்றைப் பிடுங்கினான். அதைக் கையில் எடுத்து உற்று நோக்கினான். நோக்கியதும் அவன் உள்ளம் அனலிடைப் பட்ட புழுவெனத் துடித்தது. உடனே அச்செடியினை அவளுக்குக் காட்டி, "இது என்னவென்று உனக்குத் தெரியுமோ?" எனக் கேட்டான்.

அதைப் பார்த்ததும் கமலநாயகி மனதில் பெருந் துயர் எழுந்தது. அவள் அதை மறைக்க முயன்றும் அவ்வுணர்ச்சிக் குறிகள் அவளையும் மீறிக்கொண்டு முகத்தில் வந்து தோன்றின. ஓர் வரட்டுப் புன்னகையைத் தன் முகத்தில் வலிதாக வரவழைத்தவளாய் "என்ன தெரியாதோ? உது துளசி. உதை இக்காட்டிற் பலவிடங்களிலும் காணலாம்'' என்றாள்.

அதைக்கேட்டதும் அவன், "என் வீட்டிலே ஒரு பழைய பொத்தகம் உண்டு. சிறுவயதிலே அதில் நான் பலவகையான பாட்டுக்களை எழுதிவந்தேன். சரி போகட்டும். அதெல்லாம் அந்த நாட்களில். ஆனால் நெடுநாளாய் அவ்வழக்கத்தை விட்டுவிட்டேன். அப் பொத்தகத்தின் ஒற்றைக்குள் துளசிச் செடியின் கெட்டொன்று இன்னுமிருக்கிறது. ஆனால் அது காய்ந்த கெட்டு. அதை யார் எனக்குக் கொடுத்ததென்று உனக்குத் தெரியுமோ?'' என்றான்.

அதற்கு அவள் விடையொன்றும் பகர்ந்திலள். சும்மா தலையை அசைத்தாள். ஆனால் அவள் கண்கள் கீழ்நோக்கின. அந்நோக்கு அவன் கையிலிருந்த செடியிலே வீழ்ந்தது. இந்நிலையில் இருவரும் அசைவற்று நின்றனர். ஒரு கணநேரம் அவள் கண்கள் அவன் முகத்தை நிமிர்ந்து நோக்கின. அப்பொழுது அவற்றில் நீர்த்துளி நிரம்பி இருப்பதை அவன் கண்டான்.

"கமலா! அதோ பார், அங்கு தெரியும் கரிய மலைகளை. அவைகளுக்கு அந்தப் பக்கத்திலேயே நம் இளமை உறைந்தது. அதன் நிலைமை என்னவாயிற்று?'' என்று கேட்டான்.

ஓரே அமைதி. இருவரும் ஏரியை நோக்கி நடந்தனர். நடக்கையில் குளிர் காற்று அடிக்கத் தொடங்கியது. வானத்தின் குடபாலில் கருமுகிலொன்று கிளம்பிற்று. மழை வரப்போகின்றது என்று கூறிக்கொண்டு கடுகி நடந்தனள் கமலநாயகி. அதைக் கேட்டு அழகசுந்தரன், "அப்படித்தான் எனக்குந்தோன்றுகிறது; வா, வீட்டுக்கு விரைந்து செல்லுவோம்" என்று கூறிவிட்டு அவளோடு கூட விரைந்து சென்றான். இருவரும் ஏரிக்கரையை அண்மித் தாம் ஏறிவந்த ஓடம் நிற்கும் இடத்தை அடைந்தனர்.

அடைந்ததும் அழகசுந்தரன் ஓடத்திலேறி அதன் பின்னணியத்தில் இருந்தான். பின், சவளைக் கையி லெடுத்து வைத்துக்கொண்டு கமலநாயகி ஏறுமட்டும் காத்திருந்தான். அவள் ஓடத்தின் முன்னணியத்திற்குச் சென்று அவனுக்குப் பின்காட்டியவண்ணம் அமர்ந் தாள். அமர்ந்ததும் அழகசுந்தரன் சவளை எடுத்து வலித்தான். ஓடம் செல்லும்போது அதன் ஓரத்து விளிம்பில் அவள் கை இருந்தது. அப்பொழுது அவ்வோடத்திலுள்ள பொருட்கள்மீது அழகசுந்தரன் பார்வை சென்றது. அவள் கண்களோ எதிரே தூரத் திலுள்ள பொருட்களை நோக்கிய வண்ணம் இருந்தன. தற்செயலாக அவன் பார்வை அவ்வோடத்தின் ஓரத் திலிருந்த அவள் கையின்மீது விழுந்தது. கமலநாயகி வாய்விட்டியம்பாது தனக்குள் மறைத்து வைத்த மன நிலையை அவள் கை எடுத்து மொழிந்தது. துடிக்கும் தம் இதயக் கனலைப் பிறர்க்கெடுத்துரைக்கலாகா உள்ளத் துயரை ஆற்றுதற்கு மகளிர் கங்குற் பொழுதில் கண்ணுறங்காது தம் மார்பின்மீது வைத்தலால் வாடி வதங்கிய மலர்க்கை அல்லலுற்ற அவர்தம் உள்ளக்

குமுறலைத் தெளிவுறத் தெரிக்குமன்றோ! அழகசுந்தரன் தன் கையினையே உற்று நோக்குவதை ஒருவாறு உணர்ந்த கமலநாயகி அதனை மெதுவாய் எடுத்து நீருக்குள் வைத்து மறைத்து அலம்பிக் கொண்டிருந்தனள்.

பின்னர் வீட்டுக்கு அருகே வந்ததும், சாணை பிடிப்பவன் ஒருவனின் வண்டி நிற்பதைக் கண்டனர். விரித்த சடையையுடைய ஒருவன் தனது வாய்க்குள்ளே பாடியவண்ணம் கத்தியொன்றை வண்டியில் அமைத்திருந்த சாணைக் கல்லுருளில் வைத்துத் தீட்டிக்கொண்டிருந்தான். அவனுடன் கூடவந்த அவன் நாய் நாக்கை நீட்டி இளைத்தவாறு கீழே பக்கத்திற் படுத்திருந்தது. வீட்டு வாசலில் கந்தை உடை அணிந்த பெண்ணொருத்தி நின்றாள். அவள் உருவத்தைக் கூர்ந்து நோக்கின் இளமையில் அவள் அழகிய உருவுடன் திகழ்ந்திருந்தாள் என ஊகித்தறியலாம். கமலநாயகியும் அழகசுந்தரனும் வீட்டை நோக்கி வரக் கண்டதும் அப்பெண் அங்கு நின்று தன் கையை நீட்டிக் கமலநாயகியை நோக்கி, "அம்மா பிச்சை போடுங்கள்" என இரந்தாள்.

அப்பொழுது அழகசுந்தரன் தன்மடிக்குள் கையை வைத்தான். ஆனால் அவன் மடியிலிருந்து பணத்தை எடுப்பதற்கு முன் கமலநாயகி தான் கையில் வைத்திருந்த பையைக் கவிழ்த்து அதிலிருந்த பணம் முழுவதையும் அப்பிச்சைக்காரியின் நீட்டிய கைக்குள்ளே கொட்டிவிட்டாள். கொட்டியதும் விரைந்து வீட்டிற்குட் சென்றாள். அவள் உள்ளே செல்லும்போது பொருமலோடு கூடிய அழுகை ஒலியொன்று அழகசுந்தரன் காதில் வீழ்ந்தது. கமலநாயகியே அழுகின்றாளென

ஐயுற்ற அவன் அவளை உட்செல்லவிடாது தடுக்கலாமோவென எண்ணினன். ஆனால் ஓர் இமைப்பொழுதில் அங்ஙனம் செய்தல் சரியன்று என ஓர் உணர்ச்சி தோன்றினமையின் அவ்வாறு செய்திலன்.

பிச்சைக்காரியோ நீட்டிய கையை மடக்காது அங்கு நிகழ்ந்தவற்றை உற்றுநோக்கிக்கொண்டு பின்னும் வீட்டு வாசலிலேயே அங்காந்த வாயுடன் அசையாது நின்றனள். கமலநாயகி அளித்த பணமும் அவள் கையிலேயே இருந்தது.

அவள் நிலையைக்கண்ட அழகசுந்தரன், "ஏன் இன்னும் நிற்கிறாய், வேறென்ன வேண்டும்?" என்று அவளைக்கேட்டான்.

உடனே அவள் திடுக்கிட்டு, 'ஒன்றும் வேண்டாம்' என்று கூறிவிட்டு ஓரடி எடுத்து வைத்தவள் சட்டெனத் தன் முகத்தைத் திருப்பி அவனை உற்று நோக்கினள். அப்பொழுது அவள் கண்கள் பித்துப்பிடித்தவள் கண்கள்போற் சுழன்றன. பின் வாசலினின்றும் மெதுவாய் விலகிச்சென்றனள். அவள் செயலைக்கண்டு வியப்புற்ற அழகசுந்தரன் அவளைக் கூர்ந்து நோக்கிவிட்டு 'மங்கம்மா' என்று அழைத்தனன். அது அவள் காதில் விழுந்தது. தலைகுனிந்த வண்ணம் தன் கைகளைக் குறுக்காகத் தோள்மீது வைத்துக்கொண்டு

"இணைபிரிந் துலகமிதில் யாக்கைவிட் டேகும்போழ்தில்
புணையிலாத் தமியளாகிப் போகுவன் நினைவிடுத்தே."

என்று பாடியவண்ணம் வண்டியை நோக்கிப் போனாள். இப்பாட்டு அவன் கேட்ட பழைய பாட்டுக்களுள் ஒன்று.

இதன் வண்ணமும் பொருளும் அவன் காதைத் துளைத் தன. அவன் மூச்சுத் திணறியது. சிறிது நேரம் மனந் தடுமாறியவனாய் நின்றான்; தடுமாற்றம் நீங்கியதும் திரும்பித் தன் அறைக்குட் சென்றான.

மனதை அமைதிப் படுத்துவதற்கு ஏதாவது படிக்கலாமென எண்ணிக்கொண்டு தன் மேசைக்கருகு போய் இருந்தான். ஆனால் அவன் எண்ணங்கள் பொத்தகத்திற் சென்றில. வேறெங்கோ ஓடிக்கொண் டிருந்தன. எனினும் அவற்றை ஒன்றுகூட்டித் தன் படிப்பிற் செலுத்துவதற்கு ஒருமணி நேரமாகப் பாடு பட்டான். ஆனால் அம்முயற்சி ஒன்றும் பயன்படவில்லை. அதனால் இங்கிருப்பது வீண் என எண்ணித் தன் அறையைவிட்டு நீங்கி மண்டபத்துக்கு வந்தான். அங்கோ ஒருவருமில்லை. தண்ணிய நிலா வொளியே ஊசலாடிக்கொண்டிருந்தது. பொழுதுபோக்குக்காக கமலநாயகி வழக்கமாய் அமர்ந்திருந்து வாசிக்கும் மேசைக்கருகு சென்றான். அம்மேசையில் அவள் பெயர் பொறித்த பொத்தகமொன்று கிடந்தது. அதைத் தன் கையிலெடுத்தான். அப்பொழுது அவன் நெஞ்சம் திக்கென்று அடித்தது. உடனே பொத்தகத்தைக் கீழே வைத்தான். அவனுள்ளம் சிறிதேனும் அமைதி அடைந்திலது. ஏரிப்பக்கம் போனான். அங்கு கரையிலே கட்டியிருந்த ஓடத்தை அவிழ்த்தான். அதிலேறிச் சவளைக் கையிலெடுத்தான். வலிக்கத் தொடங்கினான். ஓடம் கரையோரமாகச் சென்றது. செல்லும்போது சற்றுமுன் தானும் கமலநாயகியும் உலாவித்திரிந்த இடங்களை எல்லாம் ஆவலோடு நோக்கினான். அவன் வீடுவந்து சேரும்போது இருட்டிவிட்டது. வீட்டுக்

கருகாமையில் இருக்கும் தோட்டத்துள்ளே வண்டிக்காரன் நிற்பதைக் கண்டான். அவன் வண்டியிற் கட்டி வந்த குதிரைகளை அவிழ்த்துப் புற்றரையில் மேய விட்டுக்கொண்டு நின்றான். ஏனெனில் பயணம் சென்றோர் திரும்பி வந்துவிட்டனர்.

அழகசுந்தரன் வீட்டு பண்டபத்துக்கு வந்தபோது சாம்பசிவம் அடுத்த அறையில் அங்குமிங்கும் உலாவும் அரவம் அவனுக்குக் கேட்டது. எனினும் அவன் சாம்பசிவத்திடம் செல்லவில்லை. அவ்வறையின் வாசலுக் கருகில் சிறிது நேரம் நின்றனன். பின்னர் மெதுவாய்த் தன் அறைக்குட் சென்றான். அங்கே சாளரத்துக்கருகே நாற்காலி ஒன்றை இழுத்துப் போட்டுக்கொண்டு அதன் மேல் அமர்ந்தான். அண்மையிலுள்ள மரங்களினின்று அன்றில் தன் துணையை அழைக்கும் துடிதுடிப்பான ஓசை கேட்டது. சிறிது நேரம் அப்பறவையின் இசையின்பத்திலே அவன் ஈடுபட்டிருந்தான். அங்ஙனம் அவன் செவிகளில் வீழ்ந்த ஓசை உண்மையில் அவன் உள்ளத் துடிப்பின் எதிரொலியே.

படிப்படியாக எங்கணும் ஒலியடங்கிற்று. வீட்டிலும் அமைதி நிலவியது. கங்குற்பொழுதாகி நாழிகை பல கழிந்துவிட்டன. காதலர் உள்ளத்தை வெதுப்பும் வானூர் மதியம் தன் வெண்கதிர்களைப் பரப்பிக் கொண்டு உரோகிணி மீனொடு விண்ணத்து முகட்டை அண்மியது.

அழகசுந்தரன் எழுந்து திறந்திருந்த சாளரத்தினூடாக வெளியே பார்த்தான். மரங்களின் இலைகளில் பனித்துளி சிந்தும் ஒலி கேட்டது. வைகறை

யாமமும் ஆயிற்று. அழகசுந்தரனோ இன்னுங்கண்ணோடு கண் மூடவில்லை. உடுவின் வேந்தனும் தன் ஒண் கதிர்களை ஒடுக்கிக்கொண்டு வானவழியூடு சென்றதனால் உண்டாய களைப்பை ஒழிப்பான் வேண்டிக் குட கடல் நீரில் குளிக்க மறைந்தனன். சிறிதுசிறிதாக வானத்திருந்த கருமை நிறம் கீழ்த்திசையினின்று எழும் செங்கல் மங்கலான மஞ்சள் நிற ஒளியினால் கலையத் தொடங்கியது. தண்ணிய இளங்காற்றொன்று வீசியது. அது அழகசுந்தரன் முகத்திற்பட்டது. வானம்பாடியும் தனது கம்பீரமான இசையைப் பாடிக்கொண்டு வானத்து எழுந்தது.

அழகசுந்தரன் திடீரெனத் திரும்பித் தனது மேசைக்கருகு வந்தான். அங்கு ஒரு பென்சிலைத் தடவி எடுத்து ஒரு வெள்ளைத் தாளில் சில சொற்றொடர்களை எழுதினான். எழுதி முடிந்ததும் பிரம்பைக் கையில் எடுத்தான். தான் எழுதிய தாளை அம்மேசையில் வைத்துவிட்டு மெதுவாய்க் கதவைத் திறந்து மண்டபத்துள் வந்தான்.

கதிரவனின் காலைக்கதிர்கள் வானத்தில் எங்கணும் பரந்துகொண்டு வந்தன. அழகசுந்தரன் வந்ததும் அம் மண்டபத்திற் போட்ட பாயொன்றிற் படுத்திருந்த அவ் வீட்டுப் பெரிய பூனை தன் தூக்கம் கலைந்து அவனருகு வந்து அவன் காலைத் தன் உடலினால் உரோஞ்சியது. கழனிக் குருவி வீட்டுக்கருகேயுள்ள மரங்களில் நின்று கிலுகிலுவென்னும் ஓசையைப் பரப்பி, "இராப் பொழுது சென்றுவிட்டது. எழுந்திருங்கள்" என்று மாந்தரைத் துயிலுணர்த்தியது.

அந்நேரத்து அங்குள்ள அறை ஒன்றின் கதவு திறந்தது. யாரோ வருவது போற்றோற்றியது. அழகசுந்தரன் அப்பக்கத்தை நோக்கியபோது கமலநாயகி தனக்கருகே வந்து நிற்பதைக் கண்டான். அவள் இதழ்கள் ஏதோ பேசுவதுபோல் அசைந்தன. ஆனால் அவள் பேசிய சொற்களொன்றும் அவன் காதில் விழுந்தில. உற்றுக் கேட்டான். அப்போது பின்வருஞ் சொற்கள் அவன் காதில் வீழ்ந்தன. "நீ இனிமேல் இங்கு வரமாட்டாய், அல்லவா?"

"இல்லை, ஒருபோதும் வரமாட்டேன்" என்று கூறினன். அதன்பின் கமலநாயகி ஒன்றும் பேசவில்லை. அழகசுந்தரன் கதவருகே சென்றான். அங்கு நின்ற வண்ணம் ஒருமுறை அவளைத் திரும்பிப் பார்த்தனன். அவளோ அசைவற்ற மரம்போல நின்றாள். உயிரற்ற ஓவியத்தின் கண்போல மாறிய தன் ஒளியிழந்த விழிகளால் அவனைப் பார்த்தனள். அவன் ஓரடி முன் வைத்தான். வைத்ததும் அவளை மீண்டுமொருமுறை நோக்கினான். மிகவும் பாடுபட்டுத் தன் உணர்ச்சிகளை அடக்கிக்கொண்டு சடக்கெனத் திரும்பிக் கதவைத் திறந்து வெளியே சென்றான்.

வெளியிலே, உலகம் காலை ஒளியில் மூழ்கிக்கிடந்தது. சிலந்தி வலையிலே தொங்கும் பனிநீர்த்துளிகள் எழுந்து வரும் இளங்கதிரொளியில் முத்துப்போல் மின்னிக் கொண்டிருந்தன. அவனோ வீட்டினை மறுமுறையும் திரும்பிப் பார்க்காது விரைந்து முன்னோக்கி நடந்தான். அமைதி நிலவும் அப்பூஞ்சோலைத் தோட்டமும் அங்குள்ள அழகிய வீடும் மெல்ல மெல்ல அவன்கட் புலனுக்கு மறைந்து போயின. பரந்த பெரிய உலகு அவன் மனக்கண்முன் எழுந்தது.

## முதுமைப் பருவம்

சாளரக் கண்ணாடிகளுக்கூடாகத் தண்மதியின் ஒண்கதிர்கள் அறைக்குட் புகாது நின்றுவிட்டன. யாங்கணும் இருள் செறிந்துவிட்டது. ஆனால் நாற்காலியில் அமர்ந்திருந்த அம்முதியோனோ கை கட்டியவண்ணம் வெறுமையான அவ்வறையைப் பார்த்தவாறே இருந்தான்.

அவனைச் சூழ்ந்திருந்த காரிருள் அவன் கண்களுக்கு முன் சிறிதுசிறிதாகக் கலைந்துபோய் அகன்ற ஒரு நீல ஏரியாக மாறியது. அலைகளுக்குப்பின் அலைகள் உருண்டுருண்டு சென்ற வண்ணமே இருந்தன. இறுதியில் வந்த அலையிலே அம்முதியோன் கட்புலன் அரிதிற் சென்றடையக்கூடிய சேய்மைக்கண்ணே வெண்ணிறமான ஒரு அல்லிமலர் அகன்ற இலைகளினிடையே தனியே நின்று அசைந்தசைந்து மிளிர்ந்து கொண்டிருந்தது.

கதவு திறந்தது. வெளிச்சமொன்று அறைக்குட் புகுந்தது.

"நீ வந்து விட்டாயோ? அன்னம்மா! விளக்கை மேசையின்மேல் வை" என்று அம்முதியோன் கூறினன்.

பின் மேசைக்கணித்தாய்த் தன் நாற்காலியை இழுத்துக்கொண்டு சென்றனன். அதில் அமர்ந்து அம்மேசையிலே திறந்தபடியே இருந்த புத்தகமொன்றைத் தன்னருகே இழுத்து இளமைக்காலத்திலே எவ்வாறு ஊக்கமாய்ப் படித்தனனோ அவ்வாறே படிக்கத் தொடங்கினன்.

முற்றிற்று

ஹோமியோபதி பிரஸ், கும்பகோணம்.

## பிழை திருத்தம்.

| பக் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 13 | 16 | செறிந்திருத்தன | செறிந்திருந்தன |
| 14 | 1 | தூரத்துகப்பால் | தூரத்துக்கப்பால் |
| 21 | 12 | அவரிவரும் | அவரிருவரும் |
| 23 | 4 | தவலறு | தவலரு |
| 32 | 12 | உருவபடம் | உருவப்படம் |
| 40 | 17 | எரித்துக் | எறித்துக் |
| 42 | 10 | கோட்டை | கெட்டை |
| 65 | 13 | மருவிய யான் | மருவியெ யான் |

## இந்நூலாசிரியர் இயற்றிய வேறு நூல்கள்:-

1. காதலி ஆற்றுப் படை
2. நாஞடகம்
3. மாணிக்க மாலை
4. இரு நாடகம்
5. சங்கிலி (அச்சில்)
6. வாழ்க்கையின் விநோதங்கள் (அச்சில்)

ஹோமியோபதி பிரஸ் கும்பகோணம்.